AR 30

# மானம்பாடி



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008
2016, திருவள்ளுவர் ஆண்டு - 2047

# மானம்பாடி

# மானம்பாடி

பதிப்பாசிரியர்
முனைவர் **தா. கார்த்திகேயன்,** இஆப.,
ஆணையர்

ஆசிரியர்
**கு. உமாபதி**

**வெளியீடு**
**தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை**
**சென்னை-600008**
**2016, திருவள்ளுவர் ஆண்டு - 2047**

## நூல் விவரம்

| | |
|---|---|
| முதற்பதிப்பு | : 2016 |
| வெளியீடு எண் | : 281 |
| நூல் தலைப்பு | : மானம்பாடி |
| பதிப்புரிமை | : தமிழ்நாடுஅரசு தொல்லியல்துறை |
| பதிப்பாசிரியர் | : முனைவர் தா.கார்த்திகேயன், இஆப., ஆணையர் |
| ஆசிரியர் | : கு. உமாபதி |
| மொழி | : தமிழ் |
| எழுத்து | : 14 புள்ளிகள் |
| பிரதிகள் | : 1000 |
| தாள் | : 80 Gsm |
| பக்கங்கள் | : 88 |
| விலை | : ரூ. 46.00 |
| அச்சிட்டோர் | : தரமணி மகளிர் கூட்டுறவு அச்சகம், 46, பீட்டர்ஸ் ரோடு, இராயப்பேட்டை, சென்னை- 600 014. |

# பொருளடக்கம்


பதிப்புரை

1. ஊர் வரலாறு ... 1

2. கட்டடக்கலை ... 4

3. சிற்பக்கலை ... 14

4. வழிபாடுகள் ... 31

5. கல்வெட்டு ... 32

6. முடிவுரை ... 53

7. துணை நூற்பட்டியல் ... 54

நிழற்படங்கள் ... 55

முனைவர் **தா. கார்த்திகேயன்,** இ.ஆ.ப.,
ஆணையர்

தொல்லியல் துறை
தமிழ் வளர்ச்சி வளாகம்
தமிழ்ச் சாலை
சென்னை- 600 008

# பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, தமிழகத்திலுள்ள கல்வெட்டுகள், தொல்லியல், அகழாய்வு, தமிழகக் கோயில்களின் கட்டடம், கலை, சிற்பம், ஓவியம், செப்புத்திருமேனிகள் ஆகியவற்றைப் பற்றி விரிவாக மாணவர்கள் கற்கவேண்டி 1973-74-ஆம் ஆண்டு கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஒன்றினை நிறுவியது. இக்கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஆண்டுதோறும் முதுகலைப் பட்டம் பெற்ற எட்டு மாணவர்களுக்கு கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் என்னும் முதுநிலைப் பட்டயம் ஒன்றினை வழங்குகிறது. இதுவரை இப்பயிற்சி நிறுவனத்தில் 219 மாணவர்கள் பயின்றுள்ளனர்.

இம்மாணவர்களது பயிற்சிக் காலத்தில் ஒரு குறிப்பிட்ட கோயிலைத் தேர்வு செய்து அவ்வூர் மற்றும் அவ்வூரில் அமைந்துள்ள கோயில்களைப் பற்றி விரிவாக ஆய்வு செய்து ஆய்வேடு ஒன்றினைச் சமர்ப்பிக்கின்றனர். இவ்வாய்வேடுகளில் இதுவரை 35 ஆய்வேடுகள் நூல் வடிவம் பெற்றுள்ளன.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் 2012-2013-ஆம் ஆண்டு பயின்ற திரு. கு. உமாபதி அவர்கள் எழுதிய மானம்பாடி என்னும் ஆய்வேடு தற்போது 36-ஆவது நூலாக வெளிவருகிறது.

இந்நூல் தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டத்தில் அமைந்துள்ள மானம்பாடி எனும் ஊரிலுள்ள



திருக்கையிலாயநாதர் என்னும் நாகநாதசுவாமி கோயிலின் கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியவை பற்றியும், அக்கோயில் கல்வெட்டுகளின் மூலம் அறியலாகும் சோழர்கால அரசியல், சமூகப், பொருளாதாரச் செய்திகளையும் விரிவாக விளக்குகிறது. குறிப்பாக வரிவிதிப்பு, வரிநீக்கங்கள், இசையும், கூத்தும் இறைவழிபாட்டில் பெற்றிருந்த முக்கியத்துவம், கூத்துக்கலைஞர்களுக்கு வழங்கப்பட்ட நிலங்கள், நீர்ப்பாசன முறைகளைத் தெரிவிக்கும் வாய்க்கால்கள், வணிகக்குழுக்கள், கோயிலில் நிகழ்த்தப்பெற்ற திருவிழாக்கள் ஆகியன பற்றி இக்கோயில் கல்வெட்டுகளின் மூலம் விரிவாக அறியமுடிகின்றது.

மானம்பாடி என்னும் இந்நூல் பதிப்பிக்கும் பணியினை மேற்கொண்ட இத்துறை தொல்லியல் துணைக் கண்காணிப்பாளர் முனைவர் சீ. வசந்தி, உதவி கண்காணிப்பு கல்வெட்டாய்வாளர் திரு. இரா. சிவானந்தம் மற்றும் காப்பாட்சியர் (பொ) திரு பா. ஆசைத்தம்பி ஆகியோருக்கு எனது மனமார்ந்த பாராட்டுகள்.

இந்நூலினை நல்ல முறையில் கணினியில் தட்டச்சு செய்து, அட்டைப்படம் வடிவமைத்த அச்சுக்கோர்ப்பாளர் திரு. மு. சக்திவேல் மற்றும் அச்சுப்பிழைத்திருத்திய திருமதி. ச. சரஸ்வதி ஆகியோருக்கு எனது பாராட்டுகள்.

2015-2016-ஆம் ஆண்டில் தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின் கீழ் நிதியுதவி நல்கி சிறப்பிக்கும் தமிழ்நாடு அரசுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் வரலாற்று மாணவர்களுக்கும், தொல்லியல் மாணவர்களுக்கும், தொல்லியல் ஆர்வலர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் பயனுடையதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆணையர்

# ஊர் வரலாறு

பெருகிவரும் மக்கள் நெருக்கத்திற்கிடையே மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவைகளுக்கான தேடலில் வாழ்க்கையை இலகுவாக்க நாகரீக வளர்ச்சி அவசியமாகின்றது. சில சமயங்களில் இந்த நாகரீக வளர்ச்சி தான் கடந்து வந்த பாதையில் உள்ள வரலாற்றுப் பதிவுகளின் மீதே தாக்குதல் தொடுத்து விடுகிறது. இத்தாக்குதல்களினால் நமது கலை, கலாச்சாரம், பண்பாடு மொழி, வரலாறு போன்றவைகளைப் பிரதிபலிக்கும் வரலாற்றுப் பதிவுகள் பல அழிந்துள்ளன.

கும்பகோணத்திலிருந்து சுமார் 25 கி.மீ. தொலைவில் உள்ள அணைக்கரையில் பாயும் கொள்ளிடம் ஆற்றில் மேம்பாலம் கட்டுவதற்கு, ஆங்கிலேயர்கள் அருகிலுள்ள கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள முதலாம் இராஜேந்திர சோழனின் கலைப்படைப்பான கங்கை கொண்ட சோழீச்சுவரர் ஆலயத்தின் மதிற்சுவர், திருச்சுற்று மாளிகை ஆகியவைகளை வெடிவைத்துத் தகர்த்து கருங்கற்களைக் கொண்டுவந்து உபயோகப்படுத்தியுள்ளனர். இதனால் பல கல்வெட்டுகளும், வரலாற்றுத் தகவல்களும் மறைந்து போயின. சிற்சில சமயங்களில் இவ்வரலாற்றுப் பதிவுகளில் சில முன்னோர் செய்த தவப்பயனால் இதுபோன்ற தாக்குதல்களிலிருந்து தப்பிப் பிழைத்துள்ளன. இவ்வகையில் தப்பிப் பிழைத்த வரலாற்றுச் சான்றில் ஒன்று மானம்பாடியில் உள்ள முதலாம் இராஜேந்திரசோழன் காலத்தில் எழுப்பப்பட்ட திருகையிலாயநாதர் கோயில் என்னும் நாகநாதசுவாமி கோயில் ஆகும்.



**ஊர் வரலாறு**

குளிர்ந்த வயல்கள் நிறைந்த பகுதி தஞ்சாவூராகும். இது தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாகத் திகழ்கிறது. உலகப் புகழ்வாய்ந்த பெரிய கோயில் என்று அழைக்கப்படும் தஞ்சைப் பெருவுடையார் கோயில் அமைந்துள்ள இடம் தஞ்சாவூர். கலை மற்றும் பண்பாட்டினை வளர்ப்பதற்காகவும்,பாதுகாப்பதற்காகவும் நடுவண் அரசால் அமைக்கப்பட்டுள்ள தென்னகப் பண்பாட்டு மையம் தஞ்சையில் அமைந்துள்ளது. இது தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகம் ஆகிய நான்கு மாநிலங்களை உள்ளடக்கிய தென்னிந்திய தலைமை மையமாக விளங்குகிறது.

சோழ மன்னர்களின் தலைநகராக தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம், பழையாறை போன்றவை விளங்கின. இதில் கங்கை கொண்ட சோழபுரத்தில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை மேற்கொண்ட அகழாய்வின் மூலம் சோழர் கால அரண்மனை கட்டடப்பகுதிகள், செங்கற் சுவர்கள் போன்றவை வெளிப்படுத்தப்பட்டன. இதன் மூலம் அக்கால அரண்மனைகள் எவ்வாறு கட்டப்பட்டன என்பதையும், கலைகளின் சிகரமாக தஞ்சாவூர் விளங்கியதனையும் அறிகிறோம்.

மற்றொரு தலைநகரான பழையாறை கும்பகோணத்திற்கு அருகில் உள்ளது. காவிரியாற்றின் துணைநதிகள் பாயும் செழிப்பான பகுதி கும்பகோணம். கோயில்களின் நகரம் என அழைக்கப்படும் கும்பகோணம் சோழர்களின் பல கோயில்ளைக் கொண்டுள்ளது. இக்கும்பகோண வட்டத்தினுள் மானம்பாடி என்ற ஊர் அமைந்துள்ளது.

கும்பகோணம் - சென்னை செல்லும் நெடுஞ்சாலையில் கும்பகோணத்திலிருந்து 15 கி.மீ தொலைவில் சோழபுரம் என்ற ஊர் அமைந்துள்ளது. சோழபுரத்தின் அருகில் சிறப்பு வாய்ந்த கிராமமாக விளங்குவது மானம்பாடியாகும்.

மானம்பாடி கிராமத்தின் வழியே செல்லும் சென்னை நெடுஞ்சாலையில் நாகநாத சுவாமி கோயிலுக்கு அருகே உள்ள காளியம்மன் கோயிலில் தற்சமயம் இருக்கும் ஒரு பெரிய புத்தர் சிலை இங்கு ஒரு பௌத்தப்பள்ளி இருந்ததைச் சுட்டும் ஆதாரமாகக் காட்சியளிக்கிறது.

மக்களின் போக்குவரத்தை எளிதாக்கிட இச்சாலையை விரிவுபடுத்தும் நடவடிக்கை தொடங்கப்பட்டது. இச்சாலையை விரிவுபடுத்தினால் சாலையின் அருகில் அமைந்துள்ள இக்கோயில் அப்புறப்படுத்தப்படும் என்ற உணர்வினால் வரலாற்று ஆய்வாளர்களும், ஆர்வலர்களும், பக்தர்களும், இவ்வூர் மக்களும் கோயிலை அப்புறப்படுத்தாமல் சாலையை விரிவுபடுத்துமாறு நெடுஞ்சாலைத்துறையைக் கோரினர். இக்கோரிக்கைகளை ஏற்று அரசும் கோயிலை அப்புறப்படுத்தாமல் மாற்று வழியில் சாலையை விரிவுபடுத்திட நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தில் கட்டப்பட்டதாகக் கருதப்படும் இக்கோயில் தற்சமயம் பொலிவிழந்து ஒரு சிலர் அவ்வப்போது வந்து போகும் நிலையில் பழுதடைந்த நிலையில் காட்சியளிக்கின்றது.

# கட்டடக்கலை

பழங்கால மனிதன் தன் உள்ளுணர்வுகளை மற்றவர்களுக்கு வெளிப்படுத்த சைகை மொழியைப் பயன்படுத்தினான். பிறகு தனது கருத்தை அடையாளப்படுத்த குறியீடுகள், ஓவியங்களை வரைந்தான். இவ்வோவியங்கள் பாறைகளிலும், குகைகளிலும் வரையப்பட்டு காணப்படுகின்றன.

இருப்பிடத்திற்கென்று குன்றுகளையும், குகைகளையும் மனிதன் தேர்ந்தெடுத்தான். காலமாற்றத்திற்கேற்றவாறு இலை, தழைகளால் ஆன குடில்களும் மண், மரம், செங்கல், சுண்ணாம்பு பிறகு கருங்கல் என இருப்பிடங்கள் வளர்ந்தது. இவ்விருப்பிடங்களை நிலையான வாழ்விற்கு ஏற்ற ஆற்றங்கரை, ஏரிக்கரை என நீர்நிலைப் பகுதிகளை ஒட்டியே தேர்ந்தெடுத்தான். காலமாற்றத்திற்கு ஏற்றவாறு மக்களின் வாழ்க்கை நிலையிலும் பல்வேறு மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டே இருந்தன.

வீடுகளைக் கட்டி வாழத் தொடங்கிய மனிதன் நிலையான வாழ்வை எதிர்கொண்டான். இதனால் ஓரிடத்தில் பலபேர் சேர்ந்து வாழும் சூழலமைந்தது. இதன் வளர்ச்சி ஒரு சமுதாயமாகவும், பிறகு ஓர் ஊராகவும் பல ஊர்கள் இணைந்து நாடாகவும் அதன் தொடர்ச்சியாக அரசும் உருவாயின.

இவ்வாறு குகையில் வாழத்தொடங்கிய மனிதர்கள் பிறகு கட்டடங்களை உருவாக்கினர். பின்னாளில் அவர்கள் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் விதமாய் உருவான கட்டடங்கள்

பல்வேறு கலைகட்குப் பிறப்பிடமாய் அமைந்தன. தமிழகத்தில் பல்லவர் தொடங்கி விஜயநகரர் வரை காலவரிசைப்படி இக்கலைகள் பகுக்கப்படுகின்றன. இக்கலைகளின் உன்னத நிலையினை இன்று வரை அழியாது நிலைபெற்றுள்ள பல கோயில்களில் காணலாம்.

பழந்தமிழர்கள் கோயிலை, முதன்முதலில் களிமண்ணாலும், பின் மரத்தாலும், அதன்பின் செங்கல்லால் சுவரமைத்து, மரத்தால் கூரை வேய்ந்து அமைத்தனர். இன்றும் மரத்தினால் திருக்கோயில்களின் சபைகள் அமைந்திருப்பதைக் காணலாம்.

கல், மண், உலோகம், சுதை, மரம் இன்றி முதன் முதலாக மும்மூர்த்திகளுக்கு என்று தோற்றுவிக்கப்பட்ட முதல் குடவரைக் கோயில் பல்லவ மன்னன் மகேந்திரனால் தோற்றுவிக்கப்பட்டது என மண்டகப்பட்டு கல்வெட்டு உரைக்கிறது. ஆனால் பல்லவ மன்னனுக்கு முன்பே தமிழகத்தில் கருங்கற்களைக் கொண்டு சிலை உருவங்களும், குடவரைகளும் இருந்ததென்பதற்கு சான்றாக. சிவகங்கை மாவட்டம் குன்றக்குடிக்கு அருகில் உள்ள பிள்ளையார்பட்டி குடவரைக் கோயில் சிற்பத்தையும் கல்வெட்டையும் கொள்ளலாம். இக்கல்வெட்டு எழுத்தமைதியில் மிகவும் தொன்மை வாய்ந்தது எனத் தெரிகிறது. பல்லவர்களுக்கு முன்பே கருங்கல்லினால் ஆன உருவங்களும், குடைவரைகளும் இருந்தன என்பதற்கு இதுவே சான்றாகும்.[1]

## கோயில்களின் அமைப்பு

பாறைக் கோயில்களை அடுத்து கற்றளிகள் எனப்படும் (முழுதும் கற்களால் ஆனு) கற்கோயில்களில் மாமல்லபுரக் கடற்கரைக் கோயில்களும், காஞ்சி கைலாசநாதர் கோயிலும், பனமலை கற்கோயிலும் முதன் முதலில் கட்டப்பட்டவைகளாகும்.



திருநாவுக்கரசர் திருஅடைவு திருத்தாண்டகத்தில் பழந்தமிழகத்தில் இருந்த பல்வகை திருக்கோயில்களை நமக்குச் சுட்டிக்காட்டியுள்ளார். மாடக்கோயில், கரக்கோயில், ஞாழற்கோயில், கொகுடிக்கோயில், இளங்கோயில், மணிக் கோயில், ஆலக்கோயில் எனப் பலவகைத் திருக்கோயில்களை அவர் கூறியுள்ளார்.

*பெருங்காறு கடைக்கணிந்த பெருமான் சேரும்*
*பெருங் கோயில் எழுபதினோ டெட்டு மற்றும்*
*கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்*
*கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக் கோயில்*
*இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்*
*இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்*
*திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து*
*தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே.*

கோயிலின் விமானத்தை முதன்மைப்படுத்தி வகைப்படுத்தப்படும் கரக்கோயில் – வேசரம், மணிக்கோயில் – திராவிடம், இளங்கோயில் – நாகரம் போன்ற அமைப்புடைய கோயில்கள் காணப்படுகின்றன. இவற்றில் பல கோயில்கள் அழிந்தும், அழியும் நிலையிலும் உள்ளன.

## திருக்கையிலாயநாதர் கோயில்

சாலையையொட்டி அமைந்துள்ள திருக்கையிலாய நாதர் கோயில் என்னும் நாகநாத சுவாமி திருக்கோயில் பெரிதும் கவனத்தை ஈர்க்காது, மிகவும் சிதிலமடைந்து போதிய பராமரிப்பின்றிக் காணப்படுகிறது.

## நுழைவுவாயில்

கோபுரமும் நிலைக்கதவுகளும் இன்றி கோயிலின் நுழைவாயில் அமைந்துள்ளது. இந்நுழைவாயில் கிழக்குத் திசையை நோக்கி கருங்கல் தளத்தின்மீது செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. இந்நுழைவாயிலிலிருந்து தெற்கு வடக்காக

சமீபத்தில் கட்டப்பட்ட மதிற்சுவர் காணப்படுகிறது. இவ்வாயிலில் இருந்து சுமார் ஆறடி அகலத்தில் போடப்பட்டுள்ள நடைபாதை கோயிலோடு கோபுரத்தை இணைக்கிறது.

**திருக்கோயில்**

கோயில் என்பது கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், சுற்றுக்கோயில், விமானம், திருச்சுற்றுகள், மண்டபங்கள், திருமதில்கள், கோபுரம் ஆகிய உறுப்புகள் அடங்கிய அமைப்பாகும். மானம்பாடி திருக்கோயில் கருவறை, அர்த்த மண்டபம், திருச்சுற்றுகள், சுற்றுக்கோயில், திருமதில்கள் ஆகிய உறுப்புகளைக் கொண்டுள்ளது.

கோபுரத்தில் இருந்து தொடங்கும் நடைபாதை முடிந்தவுடன் சிறுமேடை போல் தளம் அமைந்துள்ளது. இம்மேடையின் பின் அர்த்தமண்டபம், கருவறை என்ற அமைப்பில் இறைவன் கிழக்குப் பார்த்தவண்ணமும், மேடையில் நந்தி இறைவனைப் பார்த்தவண்ணமும் உள்ளது. கோயிலின் வடக்குப்புறத்தில் தெற்குப் பார்த்தவண்ணம் இறைவியும், இறைவியைப் பார்த்தவண்ணம் ஒரு நந்தியும் காணப்படுகிறது.

**கருவறை**

திருக்கோயிலின் அமைப்பில் இறைவன் எழுந்தருளியிருக்கும் அறைக்குக் கருவறை என்று பெயர். கர்பஹிருகம், மூலஸ்தானம் எனவும் இது அழைக்கப்படும். திருக்கையிலாதநாதர் எழுந்தருளியுள்ள மூலஸ்தானமானது சதுர வடிவினதாக அமைந்துள்ளது. நாற்புறமும் 290 செ.மீ அளவுடையதாக இக்கருவறை அமைந்துள்ளது.

**அர்த்தமண்டபம்**

கருவறையோடு சேர்ந்ததாகவும், கருவறையின் அளவை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படும் அங்கத்திற்கு அர்த்தமண்டபம் என்று பெயர். கருவறைக்கு முகப்பில் அமைக்கப்படுவதால் இது முகமண்டபம் என்றும் அழைக்கப்படும். திருக்கையிலாயநாதர் எழுந்தருளியுள்ள கருவறைக்கு அடுத்து 667 செ.மீ நீளமும், 392 செ.மீ அகலமும் கொண்ட அர்த்த மண்டபம் அமைந்துள்ளது.



**திருச்சுற்று**

கருவறையில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தியை வலம் வந்து வணங்க அமைக்கப்படும் சுற்றுப்பாதைக்குத் திருச்சுற்று என்று பெயர். இதனை வடமொழியில் ஆவரணம் என்றும் பிரகாரம் என்றும் கூறுவர். மூலமூர்த்தியான திருக்கையிலாயநாதரை வலம் வர திருச்சுற்று அமைந்துள்ளது.

**திருச்சுற்று கோயில்**

கோயிலின் மூலமூர்த்தியின் பரிவாரங்களுக்கென அதாவது பரிவாரத் தெய்வங்களுக்குப் பிரகாரம் பத்தியில் கட்டப்படும் சிறுசிறு கோயில்களுக்குப் பரிவாரக் கோயில் என்று பெயர். திருக்கையிலாயநாதரின் பரிவாரங்களுக்கென பரிவாரக் கோயில்கள் காணப்படுகின்றன. ஆனால் அவை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது.

**திருமதில்**

திருக்கயிலாயநாதர் ஆலயத்தின் திருமதில், கருவறை, அர்த்தமண்டபம், பரிவாரக் கோயில்கள், அம்மன் சன்னதி போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது.

**விமானம்**

கருவறையின் பிரஸ்தர மேல்மட்டத்திலிருந்து சிகரத்துடன் கூடியதாகவும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தளங்களையுடையதாகக் கட்டப்பெறும் கட்டடத்திற்கு விமானம் என்று பெயர். இக்கோயில் விமானம்

கருங்கல்லுடனும் அதன்மேல் கிரீவம், சிகரம் ஆகியவை செங்கல் பணி பெற்றும் அமைந்து வேசர அமைப்பில் காணப்படுகிறது.

**உபானம்**

கருவறையில் அதிட்டானம் என்றழைக்கப்படும் உறுப்பிற்குக் கீழ் அமைக்கப்படும் மேடைக்கு உபபீடம் என்று பெயர். அழகிற்காகவும், எடுப்பானத் தோற்றத்திற்காகவும் பலத்திற்காகவும் இவ்வுறுப்பு அமைக்கப்படுகிறது. கருவறை சுற்றுக்கோயில்கள், சபா மண்டபம், மகாபலிபீடம், கொடிமர பீடம், கோபுரம், திருச்சுற்று மண்டபங்கள் ஆகியவற்றுக்கு உபபீடம் அமைத்தல் வேண்டும். உபபீடத்தில் உள்ள ஒவ்வொரு அழகிய உறுப்பிற்கும் வர்க்கம் என்று பெயர். இவற்றைச் சித்துவர்க்கம் என்றும் சில்வானம் என்றும் சிற்பிகள் வழக்கில் அழைப்பார்கள். உபபீடத்தின் உயரத்தை அதன்மேல் அமைக்கப்படும் அதிட்டான உயரத்தை அடிப்படையாகக் கொண்டு செய்வார்கள்.

இக்கோயில் உபானம், ஜகதி, பத்மவரி, குமுதம், பாதங்களும் என பாதபந்த தாங்குதளமாய் அமைந்துள்ளது.

**சுவர்**

மேலெழும் விமானச்சுவரிலிருந்து கர்ணப்பத்தியும், சாலைப்பத்தியும் முன்னிழுக்கப்பட்டுப் பிதுக்கமாய் அடித்தளம் வரை அமைந்துள்ளது. சாலைப்பத்தி கர்ணப்பத்தியிலிருந்து சற்றே முன்னிழுக்கப்பட்டு சதுரபாதம் கொண்ட ருத்ரகாந்தத் தூண்களைக் கொண்டு அணைவு பெற்றுள்ளன. இரு கர்ணபத்திகளும் இந்திரகாந்தத் தூண்களைக் கொண்டு அணைவு பெற்றுள்ளன. இரு கர்ண பத்திகளிலும் அஞ்சலி ஹஸ்தத்துடன் அடியவர்களின் சிலை காட்டப்பட்டுள்ளது. கர்ணபத்திக்கும், சாலைப்பத்திக்கும் இடையில் உள்ள ஒடுக்கங்கள் பஞ்சரங்களைக் கொண்டு அழகுபடுத்தப்பட்டுள்ளன. இப்பஞ்சர மேல் வளைவுகளில் அடியவர் ஒருவர் சுகாசனத்தில் அமர்ந்துள்ளார்.



தாமரைக்கட்டு, கலசம், தடி, கும்பம், பலகை ஆகியவை கொண்டுள்ள தூண்களிலிருந்து எழும் வீரகண்டத்தின் மீது அமர்ந்த போதிகைகள் கொடிக்கருக்குள்ள பட்டை கொண்டு விரிகோணத்தில் கைநீட்டி உத்திரம் தாங்க மேலே வாஜனம் வலபி வலபியில் பூதகணங்கள் இதன் மேல் கூரையும் தளமுடிவைக்காட்டும் பூமிதேசமும் என அமைக்கப்பட்டுள்ளது.

நாசிகை என்று சொல்லப்படும் கபோதக்கூடு கர்ணப்பத்தியிலும், சாலைப்பத்தியிலும் தலா இரண்டு வீதம் காட்சியளிக்கின்றன, தென் கருவறைச் சுவரும் மேற்குக் கருவறைச் சுவரும் இணையும் திருப்பத்தில் உள்ள கபோதகக் கூடுகளில் மட்டும் மனிதத் தலை செதுக்கப்பட்டுக் கீர்த்திமுகம் கொண்டு அழகுபடுத்தப்பட்டுள்ளன. மற்ற நாசிகைகளில் பணி முழுமை பெறவில்லை.

கருவறைச் சாலைப்பத்திகளில் தேவகோட்டங்கள் சதுர பாதம் கொண்ட உருளை அரைத்தூண்களைக் கொண்டு அணைவு பெற்றுள்ளன. கருவறையின் தெற்கு, மேற்கு மற்றும் வட கோட்டங்களில் முறையே ஆலமர் அண்ணல், அடிமுடி காட்டா அண்ணல், பிரம்மன் ஆகியோர் உள்ளனர்.

தேவகோட்டங்களில் மேல் உள்ள மகர தோரணங்களில் தெற்கு, மேற்கு மற்றும் வடக்கு மகர தோரணங்களில் முறையே சிவனின் ஊர்த்துவஜானு, உமாசகிதர் மற்றும் சிவலிங்க வழிபாடு ஆகியவை காட்டப்பட்டுள்ளன.

வேதி கண்டத்தில் சிறுசிறு சிவபுராண உருவச் சிற்பங்கள் காணப்படுகின்றன.

## முகமண்டபம்

முகமண்டபத் தென்சுவரில் உள்ள மூன்று கோட்டங்களில் கிழக்கிலிருந்து மேற்காக முறையே பிட்சாடனர், நடராஜர் மற்றும் கணபதியும் வடபுறச்சுவர்க் கோட்டங்களில் கங்காதரர், கொற்றவை மற்றும் அம்மையப்பரும் உள்ளனர். விஷ்ணு காந்த அரைத்தூண்களைக் கொண்டு அணைவு பெற்றுள்ள இக்கோட்டங்களின் மேலிருக்கும் மகரதோரணங்களில் தென்சுவரில் கிழக்கிலிருந்து மேற்காக யோக தட்சிணாமூர்த்தியின் மீது பாணம் எய்யும் மன்மதன், உமாசகிதர் மற்றும் சிவவழிபாடு காட்டப்பட்டுள்ளன. வடசுவர்க் கோட்டங்களில் கிழக்கிலிருந்து மேற்காக யானையும் சிலந்தியும் சிவனை வணங்கும் கோச்செங்கணன் புராணமும், சண்டிகேசுவரருக்கு சிவன் கொன்றை மாலை சூட்டும் சண்டீஷ்வர பதமும், கண்ணப்ப நாயனாரின் சிவ வழிபாடும் வடிக்கப்பட்டுள்ளன.

முகமண்டபக் கிழக்குச் சுவரில் உள்ள முகமண்டப வாயில் நான்முக அரைத்தூண்களால் அணைவு பெற்ற நிலைகளைப் பெற்றுள்ளன. வாயிலின் மேல் நிலைகள் இரண்டாகப் பிளந்து எப்போது வேண்டுமானாலும் கீழே விழுந்து விடும் நிலையில் உள்ளன. இவ்வாசலின் இருபக்கங்களிலும் உள்ள உயரமான அழகு பெறாத கோட்டங்களில் ஏற்கனவே துவாரபாலகர்கள் நிறுத்தப்பட்டிருக்கலாம். இத்துவாரபாலகர்கள் இக்கோயிலில் இன்று காணப்படவில்லை. ஆனால் வலதுபுறக் கோட்டத்தில் சோழர்கால அழகிய சேத்திரபாலர் சிற்பம் ஒன்று முழங்கால் அளவு சிமெண்ட் பூச்சிற்குள் நின்று கொண்டு இச்சேத்திரம் தேடி வருவோரின் பார்வைக்கு முதன்மையாய் காட்சி தருகின்றது.



## தூண்கள்

முகமண்டபம் மற்றும் கருவறை புறச்சுவர்களில் காணப்படும் சதுர அடிப்பாகம் கொண்ட தூண்களில் சதுர பாகத்தின் மேல் பூமொட்டுக்கள் காட்சியளிக்கின்றன. தூண்களில் நாகபந்தம் தோன்றுவதற்கு இதனை முன்னோடியாகக் கொள்ளலாம்.

முகமண்டபத்திற்குள் காணப்படும் உட்சுவரில் சதுர பாகம் பெற்ற சுற்றளவு பெரிதான நான்கு ருத்ரகாந்த அரைத்தூண்கள் அணைக்கின்றன. இவைகளில் மேற்கில் அமைந்துள்ள இரு தூண்களில் தாமரைக்கட்டு தாளம், மாலைத் தொங்கல்கள் உள்ளன. இம்மண்டபத்தை ஒரு உருளைத்தூணும் பல உதிரிக் கற்கள் கொண்டு சமீபத்தில் எழுப்பப்பெற்ற மற்றொரு தூணும் தாங்குகின்றன. இத்தூண்களின் மேல் இருக்கும் உத்திரம் பட்டையுடன் கூடிய குளவுத் தாங்கை பெற்றுள்ளன. ஒரு உத்திரத்தில் இப்போதிகைகள் இரு பக்கங்களிலும் வடிக்கப்பட்டு இவ்வுத்திரத்தின் கீழ், பக்கத்திற்கு ஒன்றாக இரு தூண்கள் நிலை நிறுத்தத் துவாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் தூண்கள் காணப்படவில்லை. முகமண்டபத்தின் வடக்கில் கீழ்புறம் மேற்கு நோக்கிய நிலையில் சூரியன் சிற்பமும், கருவறை வாயிலின் வலதுபுறம் பிற்கால முருகன் வள்ளி தெய்வானையுடனும், தெற்குப்புறம் சங்கு சக்கரம் அமைந்த பெருமாளும், இடப்புறம் இரண்டு பிள்ளையார்களும் மற்றும் அய்யனாரும் காட்சி தர முகமண்டபத்தின் மேற்கு திசையில் கருவறை வாயில் அமைக்கப்பட்டுக் கருவறையின் உள்ளே சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கைலாசநாதர் என்ற

திருநாமம் கொண்ட இறைவன் தற்போது பெயர் மாறி நாகநாதசுவாமி என்ற பெயருடன் அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

**அம்மன் ஆலயம்**

கோஷ்ட தெய்வங்கள் இன்றி, திராவிட விமான வடிவமைப்பைத் தாங்கி, சுற்றுச்சுவர் கற்கள் பழுதடைந்த நிலையில் காணப்படுகிறது. சுவரின் மேற்பகுதி செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. மரபுக் கட்டடக்கலை – கோ. திருஞானம், பக்கம்.8.

# சிற்பக்கலை

சிற்பங்களில் பல பிரிவுகள் உண்டு. அவை மௌரிய சிற்பம், மதுரா சிற்பம், காந்தார சிற்பம், அமராவதி சிற்பம், குப்த சிற்பம், திராவிட சிற்பம் என்பனவாகும். இதில் தமிழ்நாட்டுச் சிற்ப முறையே திராவிட சிற்பம் என்றழைக்கப் படுகிறது.

தமிழ்நாட்டில் காணப்படும் சிற்பங்கள் அனைத்தும் சைவ சமயத்தினை ஒட்டியே வளர்ச்சியடைந்துள்ளது. தெய்வங்களுக்கென ஆலயங்களைக் கட்டி வணங்குவது தமிழர்களது பழைய வழக்கங்களில் ஒன்று. பழந்தமிழ் நாட்டில் கோயில்களிருந்தன என்பதை,

*பணியிய ரத்தைநின் குடையே முனிவர்*

*முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே*

*(புறம்:6)*

என்ற பாடல் வரிகளின் மூலம் அறியலாம்.

தமிழ் இலக்கியங்களில் சிற்பக் குறிப்புகள் காணப் படுகின்றன. பண்டையத் தமிழ்நாட்டில் இசை, நாட்டியம், சிற்பம், ஓவியம் முதலான கலைகள் சிறப்புடன் வளர்க்கப்பட்டன. தமிழ் மக்களின் இசை அறிவுக்குச் சிலப்பதிகார அரங்கேற்றுக் காதை ஓர் எடுத்துக்காட்டாகும். இசையிலும் நாட்டியத்திலும் பண்டைத்தமிழர் எவ்வாறு திறமை காட்டியிருந்தனரோ அவ்வாறே ஏனைய கலைகளாகிய ஓவியம், சிற்பம் போன்றவற்றிலும் திறமையடைந்திருந்தனர். பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம்,

மணிமேகலை முதலிய நூல்களை நன்கு ஆராய்ந்து பார்ப்பின் இக்கலைகள் ஒளி பெற்று விளங்கின என்பதற்குப் பல சான்றுகள் பெறப்படும்.

அக்காலத்து அரசர் மாளிகைகளும், கோயில்களும், மண்டபங்களும் இக்காலத்தைப் போலவே சிற்ப நூலறிந்த புலவர்களால் நாள் குறித்து நாழிகை பார்த்து நேரறி கயிறிட்டுத் திசைகளையும் அத்திசைகளில் நிற்கும் தெய்வங்களையும் நோக்கி வகுக்கப்பட்டன என்பதை,

*ஒருதிறஞ் சாரா வரைநா ளமையத்து*
*நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்*
*தேஎங் கொண்டு தெய்வ நோக்கிப்*
*பெரும்பெயர் மன்னர்க் கொப்பமனை வகுத்து*
*(நெடு.75-78)*

என்னும் நெடுநல்வாடைச் செய்யுளின் மூலம் அறியலாம்.

தமிழ்நாட்டில் மிகப் பண்டையக் காலத்தில் கோயில்கள் மரத்தினாலும், மண்ணினாலும், செங்கற்களினாலுமே அமைக்கப்பட்டு இருந்தன. அதனாலேயே அக்காலத்துக் கோயில்கள் இன்று இல்லாது அழிந்து போயின. சகளாதிகாரம் என்னும் புராதன சிற்ப நூலில் மண்ணினாலும், மரத்தினாலுமே உருவங்களைச் செய்வதற்கு முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. பழைய இலக்கியங்களில் குறிப்பிட்டுள்ள கோயில்கள் திருவேகம்பம் (காஞ்சி), திருமால்குன்றம் (அழகர்மலை), திருவரங்கம், திருவேங்கடம் முதலானவை. நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படையில் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருஏரகம், திருவாவிநன்குடி, பழமுதிர்ச்சோலை முதலான கோயில்களின் சிறப்புகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. திருப்பரங்குன்றத்துக்



கோயில்களின் பக்கலின் பலப்பல சித்திரங்களையுடைய மண்டபம் ஒன்று இருந்ததாகப் பரிபாடலில் ஒரு குறிப்பு உள்ளது (பரிபாடல்.19).

மேலே குறிப்பிட்ட கோயில்கள் யாவும் கி.பி. முதலாம் நுற்றாண்டுக்கு முற்பட்டனவாயினும், இன்னும் தமிழ்நாட்டில் நிலைத்திருக்கின்றன.

இவைகள் பண்டை நாளில் சுடுமண்ணினாலும், மரத்தினாலுமே கட்டப்பட்டிருக்கலாம் ஆயினும் பிற்றை நாளில் புதுமுறைக்கு ஏற்ப கருங்கல் கற்றளிகளாக மாற்றியமைக்கப் பெற்றிருக்கின்றன.

## தமிழ்நாட்டில் கற்சிற்பங்கள்

கருங்கல்லினால் உருவங்கள் அமைக்கும் வழக்கமானது தமிழ்நாட்டில் பல்லவ அரசனாகிய மகேந்திரவர்மன் காலத்திலேயே தொடங்கியதென்பது சிற்ப வல்லுநர்களின் கருத்து. சிலப்பதிகாரத்தில் இமயச் சிலை கொண்டு கண்ணகிக்கு ஓர் உருவம் அமைத்ததாகக் கூறப்பட்டுள்ளது. மணிமேகலையில்,

*மண்ணினுங் கல்லினு மரத்தினுஞ் சுவரினுங்*
*கண்ணிய தெய்வங் காட்டுநர் வகுக்க*
*வாங்கத் தெய்வத மவ்விட நீங்கா*

எனக் கூறப்பட்டிருப்பதனால் அக்காலத்தில் கல்லுருவங்களும் நாட்டிலிருந்தன என்றே எண்ணுதல் வேண்டும்.

## சோழர் சிற்பம்

பல்லவ அரசர்களுக்குப் பின்னர் சிற்பக்கலையானது சோழ அரசர்களால் சிறப்புடன் போற்றப்பட்டது. இராஜராஜ சோழனால் தஞ்சாவூர் இராஜராஜேஸ்வரம் என்னும்

சிவாலயம் கட்டுவிக்கப்பட்டது. அவன் மகன் இரசேந்திரச் சோழனால் கங்கை கொண்ட சோழபுரத்தில் (பிரகதீஸ்வரர் ஆலயம்) ஒரு சிவாலயம் கி.பி. 1025-ஆவது ஆண்டளவில் அமைக்கப்பட்டது. இக்கோயிலின் விமானம் உலகிலுள்ள விமானங்களுக்கெல்லாம் சிறந்ததாகும். சோழ அரசர்களின் காலத்தில் ஆலயங்களில் பெரும் விமானங்கள் உடையனவாக அமைத்தலே ஒரு வழக்கமாய் இருந்தது. அக்காலத்திலும் அதற்கு பின் வந்த சோழ அரசர்களின் காலத்திலும் கல்லிலும், செம்பிலும் சிற்பங்கள் செய்யப்பட்டன.

## திருக்கையிலாயநாதர் கோயில் சிற்பங்கள்

**மூலவர்**

உயரம் 55 செ.மீ., அகலம் 65 செ.மீ. அளவுடைய லிங்கவடிவான திருக்கையிலாயநாதர் கருவறையின் மூலவராக விளங்குகின்றார்.

**அம்மன்**

தனிச்சன்னதியாக அம்மன் சன்னதி விளங்குகிறது. அச்சன்னதியில் சௌந்தரநாயகி அம்மன் உயரம் 130 செ.மீ., அகலம் 82 செ.மீ. அளவுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். தலையில் ஜடாமகுடமும் காதுகளில் மகர, பத்ர குண்டலங்கள் அணிந்து காட்சியளிக்கிறார். கழுத்தில் அணிகலன்கள் பல பூண்டு, நான்கு கரங்களில் மேலிரு கரங்ளில் மலர்கள் ஏந்தியும், கீழிரு கரங்களில் அபய வரதமளிக்கும் நிலையிலும் காட்சியளிக்கிறார்.

பெரும்பாலும் அம்மன் சன்னதியின் எதிரே சிம்மவாகனம் காட்சியளிக்கும். ஆனால் இவ்வாலயத்தில் சன்னதியின் முன் நந்தியே காணப்படுகிறது.



**விநாயகர்**

மூலவரை அடுத்து அமைந்துள்ள அர்த்தமண்டபத்தின் வலது, இடது இருபுறங்களில் விநாயகர் சிற்பம் காணப்படுகிறது. இரு விநாயகரும் அமர்ந்த நிலையில் காணப்படுகின்றனர். மூலவருக்கு இடது புறமாகக் காட்சி அளிக்கும் விநாயகர் சற்று பழுதடைந்துக் காணப்படுகின்றார். வலது புற விநாயகர் கரண்ட மகுடம் அணிந்து, நான்கு கரங்களுடன் காட்சியளிக்கிறார். மேற்கரங்களில் வலது அங்குசமும், இடது பாசமும் தாங்கியுள்ளார். கீழ் கரங்களில் வலது கரம் உடைந்த தந்தத்தைத் தாங்கியும், இடது கரம் மோதகத்தைக் கொண்டும் உள்ளது. அணிகலன்களாக கண்டிகை, யவைமாலை, சவடி, சரப்பளி, தோள்மாலை, தோள்வளை போன்ற அணிகலன்களை அணிந்து இடம்புரி விநாயகராகக் காட்சியளிக்கிறார். இவ்விநாயகரின் முகம் சற்று குட்டி யானை முகம் போல் காணப்படுகிறது.

**முருகன்**

இடது புற விநாயகருக்கு முன் எதிர் முருகன் வள்ளி, தெய்வானையுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். கழுத்தில் அணிகலன்களாக கண்டிகை, யவைமாலை, சவடி, தோள்களில் தோள்மாலை, வாகுமாலை, பிரம்ம முடிச்சுடன் கூடிய பூணூல் அணிந்தும், மார்பில் உதரபந்தத்துடனும், ஸ்தனச் சூத்திரம் அணிந்தும், கைகளில் தோள்வளை, கடகவளை, சூடகம் அணிந்தும், இடையில் முழு ஆடை தரித்து, கரண்ட மகுடத்துடன் நாற்கரங்களுடன் காட்சியளிக்கிறார். மேற்கரங்களில் முறையே வலது சத்தியையும், இடது வஜ்ராயுதத்தைத் தாங்கியும், கீழ்கரங்களில் முறையே வலது அபயமும், இடது வரதமும் தாங்கிக் காட்சியளிக்கிறார்.

முருகனின் வலது புறம் கரண்ட மகுடம் தாங்கி வள்ளி ஆபங்க நிலையில் நிற்கின்றார். அணிகலன்களாக தோள்மாலை, வாகுமாலை, தோள்வளை அணிந்தும் கழுத்தில் கண்டிகை, யவைமாலை, சவடி, சரப்பளி அணிந்தும், தோள்களில் பூணூல் அணிந்தும் முழு ஆடைத்தரித்தும் நின்ற நிலையில் காட்சியளிக்கிறார். இரண்டு கரங்களில் இடது கரம் மலரை ஏந்தியும், வலது கரம் டோல ஹஸ்த்ததுடன் காட்சியளிக்கிறார்.

முருகனின் இடது புறம் கரண்ட மகுடம் தாங்கி தெய்வயானை ஆபங்க நிலையில் நிற்கின்றார். அணிகலன்களாக தோள்மாலை, வாகுமாலை, தோள்வளை அணிந்தும் கழுத்தில் கண்டிகை, யவைமாலை, சவடி, சரப்பளி அணிந்தும், தோள்களில் பூணூல் அணிந்தும், முழுஆடைத்தரித்தும் நின்ற நிலையில் காட்சியளிக்கிறார். இரண்டு கரங்களில் வலது கரம் நீலோத்பவ மலரை ஏந்தியும், இடது கரம் டோல ஹஸ்த்ததுடன் காட்சியளிக்கிறார்.

**சண்டிகேசுவரர்**

நுழைவாயிலின் வலது புறமாக பழுதடைந்து தெளிவின்றிக் காணப்படுகிறார். தெற்குப் பார்த்தவண்ணம் அமைக்கப்படும் பரிவார தெய்வமாகும். சண்டிகேசுவரர் சிலை பரிவார ஆலயத்தில் இல்லாமல் மூலவரின் சன்னதியில் உள்ளது. பீடத்தின் மீது வலது காலைத் தொங்க விட்டு, இடது காலை பீடத்தின்மீது வைத்து கரண்ட மகுடத்தில் காணப்படுகிறார். காதுகளில் பத்ரகுண்டலமும், கழுத்தில் தடித்த மாலையும் முப்புரி நூல், உதரபந்தம் ஆகியன காணப்படுகின்றன. இரண்டு கரங்களில் வலது கரம் மழுவினை ஏந்தியும், இடது கரம் தொடை மீது வைத்தும் காட்சியளிக்கிறார்.



**விஷ்ணு**

மூலவர் ஆலயத்தினுள்ளேயே தெற்குச் சுவரில் வடக்குப் பார்த்தவண்ணம் சார்த்தி வைக்கப்பட்டுள்ளது. இச்சிலை வேறு இடத்தில் இருந்து எடுத்து வைக்கப்பட்டுள்ளது. மகுடம் அணிந்து நின்ற நிலையில் முழு ஆடைத்தரித்துக் காணப்படுகிறார். நாற்கரங்களில் காட்சியளிக்கிறார். மேல் இரண்டு கரங்களில் சங்கு, சக்கரம் தாங்கியும், கீழ் இரண்டு கரங்களில் வலது கரம் அபயமும், இடது கரம் கடி ஹஸ்தத்திலும், அவருக்குரிய அணிகலன்களைத் தாங்கிக் காட்சியளிக்கிறார்.

**சந்திரன்**

மூலவர் ஆலயத்தினுள், இறைவனை நோக்கியவாறு சந்திரன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். அவருக்கு உரிய அணிகலன்களை அணிந்து, மேற்கரங்களில் குமுத மலரை ஏந்தி, அபய, வரத முத்திரையுடன் காட்சியளிக்கிறார்.

## கோஷ்ட தெய்வங்கள்

**பைரவர்**

ஒரு முகமும், நான்கு கைகளும், உடுக்கை சூலம், தலையோடு கயிறு இவற்றைக் கைகளில் கொண்டு சிவந்த சுடர்களை உடைய சடையைத் தரித்தவரும் சிவந்த மேனியாக இளமை வடிவமும் நாயை ஊர்தியாகவும் கொண்டு காட்சியளிக்கிறார்.

**பிக்ஷாடன மூர்த்தி**

முகமண்டபத்தின் தென்புறம் கிழக்கில் உள்ள கோட்டத்தில், இடது காலை ஊன்றியும், வலது காலை சற்று தளர்த்தி முன் வைத்து சற்றே இடபுறம் பார்வை கொண்டும் கால்களில் செருப்பு அணிந்து தாருகாவனத்தில் பிச்சை எடுக்கும் பெம்மான் பூதகணத்துடன் காட்சியளிக்கிறார்.

இவரது தலையலங்காரம் பிறைநிலவை வலப்புறம் கொண்டும், பாம்புகள் அணைவு பெற்ற மண்டை ஓட்டினை நடுவில் கொண்டும் அமைந்த ஜடாபாரமாகக் காட்சியளிக்கிறது. நெற்றியில் மணிகள் பதிக்கப்பெற்ற பட்டத்தினைச் சூட்டியுள்ளார். நாற்கரங்களை உடையவர். பின் கைகளில் உடுக்கையும், கவரியும் ஏந்தி நெற்றிக்கண் விளங்கக் காட்சியளிக்கும் இப்பிட்சாடனாரின் இடது முன்கையில் கபால ஓடு ஏந்தியும், வலது முன்கை நெகிழ்வாகி மானுக்கு புல் கொடுக்கும் விதத்திலும் அமைந்துள்ளது.

கழுத்தில் ஆபரணங்களாக சவடி, அக்கமாலை, சரப்பளி, முத்துமாலை ஆகியவற்றை அணிந்த இப்பிட்சாடனாரின் முப்புரிநூல் உபவீதமாய் இறங்க இதிலிருந்து ஸ்தனச்சூத்திரம் பிரிகின்றது. கைவளை, தோள்வளை, உதரபந்தம் அணிந்தும், காதுகளில் மகரம், பனையோலைக் குண்டலம் அணிந்தும், கால்களில் வீரக்கழல் அணிந்தும் காட்சியளிக்கின்றார். மேலும் பூதகணம் ஒன்று தலையில் உணவுத்தட்டினை ஏந்திய நிலையில் உடன்வர பிச்சை ஏற்கும் பெம்மான் கம்பீரமாகக் காட்சியளிக்கிறார்.

**நடராசர்**

அர்த்தமண்டபத்தின் தென்திசையில் உள்ள கோஷ்டத்தில் ஆனந்த தாண்டவராய்க் காட்சியளிக்கும் நடராஜர் கொக்கு இறகு, நெருஞ்சிப்பூ, ஊமத்தம்பூ, பாம்புகள் அணைவு பெற்ற மண்டை ஓடு இவைகளைக் கொண்ட சடைமகுடராய்க் காட்சியளிக்கின்றார்.

காதுகளில் வலது புறம் மகரமும், இடது புறம் பனையோலையும் அணிந்துள்ளார். நுதல் விழியும் காட்டப்பட்டுள்ளது. நான்கு கரங்களைக் கொண்ட நடராசர்



பின் கைகளில் உடுக்கையும் தீச்சுடரும் ஏந்தியும், முன்கரங்களில் வலது அபய ஹஸ்தமும், இடது கஜஹஸ்தத்துடன் காணப்படுகிறார்.

வலது பாதத்தைப் பார்சுவமாய் நிறுத்தி, இடது காலை உயர்த்தி வலப்புறம் நீட்டி, புஜங்கத்ராசிதம் காட்டும் இறைவனின் இடக்கரத்தில் மணிக்கட்டு அருகே சிதைக்கப்பட்டுள்ளது.

கழுத்தில் அணிகலன்களாக கண்டிகை, யவைமாலை, சரப்பளி, சவடி, முத்துமாலை போன்ற அணிகலன்களை அணிந்து காட்சியளிக்கிறார். கைவளை, தோள்வளை, உதரபந்தம், முப்புரிநூல் அணிந்த நடராசரின் இடையில் தோலாடையும் அணிந்துள்ளார். இடையில் அணிந்துள்ள ஆடையின் முடிச்சுகள் இவர் சுழன்று ஆடும் ஆட்டத்திற்கேற்ப இருபுறமும் விசிறி விரிந்து காணப்படுகிறது. இடக்கரத்தின் மணிக்கட்டிலிருந்து பாம்பு ஒன்று தொங்குகிறது. நடராசர் கோட்டத்தின் வலப்புறம் நந்தி குடமுழா வாசிக்க அதன் அருகே அடியவர்கள் அறுவர் மகுடம் அணிந்து அஞ்சலிக் கரத்துடன் நிற்கின்றனர். இடப்புறக் கோட்ட அணைவுத் தூணில் காளி ஸ்வஸ்திக கரணத்தில் நடனமாடுகின்றாள். இவ்விருவரின் நடனங்களைப் பார்க்கும்வண்ணம் உடைவாள் தரித்த ஆண் ஒருவர், பெண் ஒருவர் மற்றும் சிறுவர்கள் அஞ்சலி ஹஸ்தத்தில் நிற்கின்றனர். இவர்களை மன்னன் குடும்பத்தினராகவோ அல்லது சிற்றரசன் குடும்பத்தினராகவோ கருதலாம்.

**விநாயகர்**

அர்த்தமண்டப தென்புறம் காணப்படும் கோட்டங்களில் மேற்கில் உள்ள கோட்டத்தில் கரண்ட மகுடம் அணிந்து விநாயகர் காட்சியளிக்கிறார். நான்கு கரங்களை உடைய

விநாயகர் வலது முன்கரத்தில் ஒடிந்த தந்தம் பெற்றும், பின்கரத்தில் அங்குசம் ஏந்தியும் காட்சியளிக்கிறார். இடது முன்கையில் மோதகமும், வலது பின் இடதுகையில் என்னவென்பது தெளிவாகத் தெரியவில்லை.

கோட்டத்தின் வலது புறம் பூதகணம் ஒன்று தலையில் தட்டு ஏந்திய நிலையிலும், இடப்புறம் ஒரு பூதகணம் பலாப்பழத்தை உரிப்பது போன்றும் காட்டப்பட்டுள்ளன. அருகில் ஓர் அடியவர் கையில் ஏதோ ஒரு பொருளை வைத்துள்ளார். கணபதியின் பின்புறம் திருவாச்சி காட்டப்பட்டுள்ளது.

### தட்சிணாமூர்த்தி

கருவறையின் தென்புறச்சுவரில் அமைத்த கோட்டத்தில் ஆலமரத்தினடியில் வலது காலைத் தொங்கவிட்டு இடது காலை மடக்கி வீராசனத்தில் அமர்ந்த நிலையில் அறமுரைத்த அண்ணலாம், தென்திசைக் கடவுளான தட்சிணாமூர்த்தி காட்சியளிக்கிறார். இடது புறம் பிறைநிலவு கொண்ட சடைபாரத்தைத் தலையலங்காரமாகக் கொண்டும் பதக்கங்கள் பெற்ற நெற்றிப்பட்டத்தை அணிந்து நெற்றிக்கண்ணுடன் காட்சியளிக்கிறார். ஜடாபாரத்துடன் இறைவன் தலை முதல் பாதம் வரை அழகிய அணிகலன்கள் அணிந்துள்ளார்.

இறைவன் வலது காதில் மகரகுண்டலமும், இடது காதில் பத்திர குண்டமும் அணிந்துள்ளார். நெற்றிப்பட்டத்தின் மேலே மண்டை ஓடு ஒன்றும், இறைவனின் தலைக்கு மேலே உள்ள ஆலமரப்பொந்தில் இரண்டு ஆந்தைகளும் பக்கமுள்ள ஆலமரக்கிளையில் தொங்கிய நிலையில் படமெடுக்கும் பாம்புகள் மற்றும் பொக்கணம் ஆகியவை உள்ளன.

நான்கு கரங்களையுடைய தட்சிணாமூர்த்தி கீழ் வலது கரம் சின் முத்திரையுடனும், இடது கரம் சுவடி ஏந்தி இடது



தொடையின் மேல்வைத்து காட்சியளிக்கிறார். வலது மேற்கரம் அக்கமாலையும், இடது மேற்கரத்தில் தீச்சுடர் தவழ்ந்த நிலையில் உள்ளது. வலது காலை முயலகன் மேல் வைத்துள்ள தட்சிணாமூர்த்தி இடது காலை வலது காலின் தொடையின்மீது வைத்துள்ளார். இடது காலின் பாதம் உடைந்துள்ளது.

கழுத்தில் கண்டிகை, யவைமாலை, சவடி, சரப்பளி, அக்கமாலை, தோள்வளை, கைவிரல்களில் மோதிரம், முப்புரி நூல், முறுக்கேறிய உதரபந்தம் ஆகிய அணிகலன்களை அணிந்த தட்சிணாமூர்த்தி இருபுறமும் சனகாதி முனிவர்களுடன் காட்சியளிக்கிறார். இத்தட்சிணாமூர்த்தியின் உயரம் 102 செ.மீட்டரும், அகலம் 51 செ.மீ கொண்ட அளவுடையதாக உள்ளது.

### இலிங்கோத்பவர்

இலிங்கத்தின் நடுவில் சந்திரசேகரமூர்த்தியும், கணுக்காலுக்குக் கீழ் மறைக்கப்பட்டு, விஷ்ணு பன்றி உருவில் கீழ் நோக்கிச் செல்வதாகவும், மேற்பகுதியில் சடைமுடி சிறிது மறைக்கப்பட்டு நான்முகன் அன்ன உருவில் மேல் நோக்கிச் செல்வதாகவும் காணப்படுகிறது.

யார் பெரியவன் என்ற போட்டியில் பிரம்மாவுக்கும், பெருமாளுக்கும் ஏற்பட்ட வாதத்தில் பெருமானின் அடிமுடியைக் காண்பவரே பெரியவர் என்ற முடிவுக்கு வந்தனர். பெருமானின் அடியைக் காண வராக உருவத்துடன் பெருமாளும், முடியைக் காண பிரம்மாவும் முயல்கின்றனர். பிரம்மா செல்ல செல்ல இறைவனின் முடியைக் காண இயலவில்லை. பெருமானின் முடியில் இருந்து விழுந்த தாழம்பூவைக் கண்ட் பிரம்மா தான் இறைவனின் முடியைக் கண்டதாக பொய் கூறும்படி தாழம்பூவிடம் கூறினார். தாழம்பூவும் அவ்வாறே பிரம்மன் முடியைக் கண்டதாக பொய்

கூறியது. அதன் பயனாக இறைவனின் முடியிலிருந்த தாழம்பூ பூசைக்கு பயன்படுத்தா நிலைக்கு இறைவனின் சாபத்தை பெற்றது. பெருமாளால் காணமுடியாததால் இறைவனைப் பணிந்து வணங்கினார்.

கருறையின் மேற்குக் கோட்டத்தில் உயரம் 128 செ.மீட்டரும், அகலம் 58 செ.மீட்டரும் கொண்டு லிங்கத்திருமேனியில் பெருமான் காட்சியளிக்கின்றார். ஜடாமகுடம் தரித்து, நெற்றிப்பட்டம் கொண்டவராய், இடச்செவியில் பத்திர குண்டலமும், வலச்செவியில் மகரமும், கழுத்தில் கண்டிகை, யவைமாலை, சவடி, சரப்பளி, முத்துமாலை அணிந்தும் கைவளை, தோள்வளை, விரல்களில் மோதிரம் பெற்றும், சிங்கமுக அரைக்கச்சு அணிந்தும், இதன் முடிச்சுகள் இருபுறம் காட்டியும், வலது முன்கரம் அபய ஹஸ்தமும், இடது முன்கரம் ஊறு ஹஸ்தத்திலும், பின் கைகளில் வலது மழு, இடது கையில் மான் கொண்டு விளங்கும் இவ்வண்ணலின் காணமுடியாத அடியைத் தேடும் நிலையில் கீழே வராகம், மேலே பிரம்மா அஞ்சலி ஹஸ்தத்திலும் காட்சியளிக்கின்றார். பிரம்மா மூன்று தலையுடனும் அருகே தாழம்பூவும் அழகான காட்சியாக உள்ளது.

பெருமானின் இடப்புறம் 77 செ.மீட்டர் அளவு உயரமும், 30 செ.மீட்டர் அகலமுடன் பிரம்மாவும் வலப்புறம் 72 செ.மீட்டர் உயரமும், 30 செ.மீட்டர் அகலமுடைய பெருமாளும் நின்று பெருமானை வணங்கும் நிலையில், நான்கு கரங்களுடன் பின் கரத்தில் மலர் மொட்டுகளும், முன்கரம் அஞ்சலி ஹஸ்தத்துடனும், பெருமாள் பின்கையில் சங்கு, சக்கரம் ஏந்தி, முன்கையில் அஞ்சலி ஹஸ்தத்துடனும் அவரவர்களுக்கு உரிய அணிகலன்கள் அனைத்தையும் அணிந்து காட்சியளிக்கின்றனர்.



**பிரம்மா**

கருவறையின் வடக்குக் கோட்டத்தில் சமபாதநிலையில் பத்ம பீடத்தில் நின்ற நிலையில் காட்சியளிக்கிறார். மூன்று முகத்துடன் தாடியுடன் காணப்படும் பிரம்மன் முன்முகம் சிதைந்த நிலையில் உள்ளது. ஜடாமகுடம் அணிந்து, காதுகளில் மகரமும், கழுத்தில் அக்கமாலையும், மார்பில் முப்புரி நூலும், உதர பந்தம் அணிந்தும் காணப்படுகிறார். நான்கு கரங்களில் வலது முன்கரத்தில் அக்கமாலையும், கடக முத்திரையும், இடது முன்கரத்தில் கெண்டிகைக் கொண்டும், தோள்வளை அணிந்தும் காட்சியளிக்கிறார்.

**அர்த்தநாரீஸ்வரர்**

முகமண்டப வடசுவரின் மேற்கில் அமைந்துள்ள கோட்டத்தில் அர்த்தநாரீஸ்வரர் நின்ற கோலத்தில் காட்சித் தருகிறார். இடது பக்கம் தேவியின் பாகத்துடன் வலது பக்கம் சிவனின் பாகமாகவும் அர்ப்பணித்துக் கொண்டு இடது பக்கம் தேவியின் அமைதியாக, கரண்ட மகுடமும் காதில் பத்ர குண்டலமும், கரத்தில் நீலோற்பவ மலரைத் தாங்கியும், இடுப்பை இடது பக்கமாக வளைத்து அதிபங்க நிலையில் காலை நிலையாக ஊன்றியும், இடுப்பில் மேகலையை அணிந்தும், இடுப்புக்குக் கீழ் முழு ஆடைத் தரித்தும், கழுத்தில் ஆபரணமாக கண்டிகை, யவைமாலை, காசுமாலை, சரபளி, சவடி, ஸ்தனச்சூத்திரம் இவைகளை ஆபரணங்களாக அணிந்தும், மேலும் தோள்மாலை ஆரம், வாகுமாலை இவைகளைத் தரித்தும் காட்சியளிக்கிறார். வலது புறம் சிவனின் அம்சமாக ஜடாமகுடமும் காதில் மகர குண்டலமும் அணிந்துள்ளார். வலது பின்கரத்தில் முத்தலை ஈட்டி தாங்கியும், வலது முன் கரத்தை பின்னால் நிற்கும் காளையின் தலைமீது கஜஹஸ்தத்தில் தாங்குதலாய் வைத்துள்ளார். இடுப்பைச் சற்று வளைத்து, காலை சற்று

வளைத்தும், பீடத்தின் மீது ஊன்றியவாறும், கழுத்தில் ஆபரணங்கள் அணிந்தும், முப்புரிநூல் ஸ்தனச் சூத்திரம், தோள்மாலை, வாகுமாலை இவைகளை அணிந்தும், இடுப்புக்கீழ் அரையாடை உடுத்தி இம்மூர்த்தியானவர் உமையொரு பாகன் என்ற அமைப்புடன் ரிஷபத்தின் மீது சாய்ந்த நிலையில் அழகாகக் காட்சியளிக்கிறார்.

## துர்க்கை

முகமண்டபத் தென்புறச் சாலைப்பத்திக் கோட்டத்தில் மகிடத்தின் தலைமீது இடது காலை அழுத்தி ஊன்றி, வலது காலைத் தளர்த்திச் சற்றே இடப்புறம் சாய்ந்து நிற்கும் துர்க்கை நின்ற நிலையில் காட்சியளிக்கிறார். இவரின் தலையில் கரண்டமகுடம், நெற்றியில் பட்டம் சூடி, கழுத்தில் சவடி, சரப்பளி அணிந்தும், மார்பில் கச்சுக்கொண்டு காட்சியளிக்கும் இத்துர்க்கையின் செவிகளில் மகரகுண்டலம் அணிந்தும், நான்கு கரங்களைக் கொண்ட துர்க்கை வலது பின்கரத்தில் சக்கரமும், இடது பின்கரத்தில் சங்கும் கொண்டு வாள், அம்பும் காணப்படுகிறது.

வலது முன்கரத்தில் அபய ஹஸ்தம் காட்டியும், இடது முன்கரத்தில் கிளி ஒன்றினை ஏந்தியும் காட்சியளிக்கும் இக்கொற்றவையின் கைகளில் அடுக்கு வளையல்கள், கால்களில் தாள்செறிகள் காட்டப்பட்டுள்ளன. கொற்றவையின் தலைக்கு மேலே குடையும், பக்கங்களில் சாமரங்களும் உள்ளன.

## சிவன் பார்வதி

அர்த்தமண்டப வடபுறச் சுவரில் கிழக்கில் உள்ள கோட்டத்தில் சடைமகுடராய் காட்சியளிக்கும் கங்காதரரின் செவிகளில் மகரம், வலது முன் கரத்தில் சின்முத்திரை காட்டி, இடதுமுன்கையால் இறைவியை ஆலிங்கனம் செய்யும் இவரின் வலப்பின்கரத்தில் உடுக்கை, இடப்பின்கரத்தில் மானைக் கொண்டும் காட்சியளிக்கின்றார்.



அணிகலன்களாக கண்டிகை, யவைமாலை, சரப்பளி, முப்புரிநூல், உதரபந்தமும் பெற்றுத் தன் உடலை வலப்புறம் சற்றே சாய்ந்துள்ள கங்காதரரின் ஆலிங்கனத்தால் ஆளப்பட்ட இறைவி இறைவனை நோக்கித் திரும்பி நிற்கின்றார். கரண்டமகுடம் அணிந்த இறைவியின் கழுத்தில் சரப்பளி ஆரம், இறைவியின் வலது கரம் மலர் ஏந்தியும், இடது கரம் நெகிழ்வுடன் டோல ஹஸ்தமாகவும் காட்டப்பட்டுள்ளது.

## நந்தி

இவ்வாலயத்தில் மூன்று நந்திகள் காணப்படுகின்றன. அம்மனுக்கு எதிரே சிம்மம் காணப்படவில்லை. நந்தியே காணப்படுகின்றது. மூலவர் ஆலயத்தின் வெளியேயும் நந்தி காணப்படுகிறது. கருவறையின் உள்ளே லிங்கத்திற்கு எதிரே பலிபீடத்துடன் கூடிய நந்தி ஒன்று காணப்படுகிறது.

## கஜலட்சுமி

தனிச்சன்னதியுடன் நாற்கரங்களுடன் கரண்ட மகுடம் தாங்கி அமர்ந்த நிலையில் உள்ளார். இவரின் இருபுறமும் யானைகள் காணப்படுகின்றன. மிகவும் பழைமையான சிலையாக உள்ளது.

## மகரதோரணச் சிற்பங்கள்

மகரதோரணச் சிற்பங்களில் பிட்சாடனர் கோட்டத்தின் மேல் அமைந்துள்ள மகரதோரணத்தில் காணப்படும் யோக தட்சிணாமூர்த்தியின்மீது அம்பு எய்யும் மன்மதன், அம்மையப்பர் கோட்டத்தின் மேல் காணப்படும் கண்ணப்ப நாயனாரின் புராணம் கொற்றவை கோட்டத்தின் மேல் காணப்படும் சண்டீசுவரபதம் மற்றும் கங்காதரர் கோட்டத்தின் மேல் உள்ள கோச்செங்கணான் புராணம் ஆகியவை குறிப்பிடத்தக்கவாறு அமைந்த மகரதோரணச் சிற்பங்களாகும்.

## யோக தட்சிணாமூர்த்தி

நெற்றிப்பட்டம் சூடி, வலது காலை மடக்கி, இடது காலை இடுப்புடன் யோகப்பட்டை கொண்டு சேர்த்து உத்குடி

ஆசனத்தில் அமர்ந்து சடைமகுடதாரியாய்க் காட்சியளிக்கும் யோக தட்சிணாமூர்த்தியின் பின்கரங்களில் அக்கமாலை மற்றும் சூலம் உள்ளன. வலது முன்கரத்தைக் காக்கும் முத்திரையிலும் இடது முன்கரத்தை முழங்கால் மீதும் வைத்திருக்கும் யோக தட்சிணாமூர்த்தியின் வலது புறம் இச்சிவனை நோக்கி அம்பு எய்யும் நிலையில் மன்மதன் சித்தரிக்கப்பட்டு இருக்கிறார்.

**கண்ணப்பர்**

மலர்மாலை சூட்டப்பட்டுள்ள சிவலிங்கத்தின் முன்னால் வலதுகாலை முழங்கால் அளவில் மடக்கி இடதுகாலைக் குத்திட்டு அமர்ந்து இருக்கும் கண்ணப்பரின் வலதுகரம், அம்பு ஒன்று கொண்டு அவரது வலக்கண்ணை நோண்டி எடுப்பது போன்றும் உடனே, நிறுத்து வேண்டாம் என்று தடுப்பது போல் லிங்கத்திலிருந்து கை வெளிப்படுவது போன்ற காட்சியும், இந்நிகழ்ச்சிகளை எல்லாம் சிவலிங்கம் பின்னால் மறைந்து நின்று இக்கோயில் பூஜை செய்பவரான சிவாச்சாரியார் பார்த்துக் கொண்டிருப்பது போன்ற காட்சியும் காணப்படுகிறது.

இச்சிற்பம் சேக்கிழார் புராணத்திலிருந்து மாறுபட்டு காணப்படுகிறது.

**சண்டீசுவர பதம்**

கொற்றவை அமைந்துள்ள கோட்டத்தின் மேல் உள்ள மகரதோரணத்தில் இச்சிற்பம் உள்ளது. சிவன் பின்கைகளில் மான், மழு கொண்டு சுகாசனத்தில் அமர்ந்து உள்ளார். அவருக்கு அருகில் இறைவி உத்குடி ஆசனத்தில் அமர்ந்துள்ளார். அவர்களுக்குக் கீழே வலது காலை மடக்கி, இடது கால் குத்திட்டு, உட்கார்ந்து கைகளை வணங்கும் முத்திரையில் கொண்டு காட்சியளிக்கும் சண்டீசுவரரின் தலையில் கொன்றை மாலையைச் சூட்டித் தனது கணங்களுக்குத் தலைவனாக்கும் நிகழ்வு காட்டப்பட்டுள்ளது.



முதலாம் இராஜேந்திரனால் எடுக்கப்பட்ட கங்கை கொண்ட சோழபுரத்திலுள்ள இம்மாதிரி சிற்பம் உலகப்புகழ் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**கோச்செங்கணான் புராணம்**

இங்கு யானையும் சிலந்தியும் செய்யும் சிவவழிபாடு அழகுறக் காட்சியளிக்கிறது. மேலும் மரத்தின் அருகே சாமரம் ஏந்திய பெண் ஒருவர் காட்டப்பட்டுள்ளார்.

கோச்செங்கணான் வரலாற்றில் குறிப்பிடப்படும் யானையும், சிலந்தியும் சிவவழிபாடு செய்யும் காட்சி மகரதோரணத்தில் சிற்பமாகக் காணப்படுகிறது.

வெண்ணாவல் மரத்தின் கீழ் உள்ள சிவலிங்கத்தின்மீது யானை ஒன்று துதிக்கைக் கொண்டு மலர் சொரிந்து வழிபாடு செய்கின்றது. இவ்வெண்ணாவல் மரத்திலிருந்து கீழே விழும் சருகுகள் சிவலிங்கத்தின்மீது விழுந்து விடாமல் இருக்கும் பொருட்டுச் சிலந்தி ஒன்று சிவலிங்கத்தின் மேலே வலைப்பின்னித் தன் அன்பை வெளிப்படுத்துகின்றது.

சிலந்தியின் தூய அன்பைத் தவறாகப் பொருள் கொண்டு யானை சிலந்தியின் அன்புக்கு இடையூறு செய்து வலையை அறுக்க, சிலந்தி யானையின் துதிக்கையில் புகுந்து கடித்துத் துன்புறுத்த, யானைக் கோபமுற்றுத் துதிக்கையைத் தரையில் வேகமாய் அடிக்க சிலந்தியும், யானையும் இறந்து போயின. இச்சிலந்தியின் மறுஜென்மத்தில் கோச்செங்கட் சோழனாகப் பிறந்து மாடக்கோயில்கள் பல கட்டினான். இது கோச்செங்கணான் புராணம் கூறும் கதை.

இது போன்று பல சிறு புராணச்சிற்பங்கள் தெளிவின்றிக் காணப்படுகின்றன.

# வழிபாடுகள்

வழிபாடுகள் கோயில்களில் தடைபடாமல் நடைபெற வேண்டும். வழிபாடு தவறுமாயின் நாட்டிற்கும் மக்களுக்கும் தீமை ஏற்படும், மழை பொய்க்கும் என்பது மக்களின் நீங்காத நம்பிக்கையாகும். தற்பொழுது மானம்பாடி ஆலயத்தில் வழிபாடு இன்றி கோயில் கைவிடப்பட்ட நிலையில் கோயிலின் அருகில் உள்ள ஒரு குடும்பம் விளக்கேற்றி வழிபடுகின்றனர். மூலவரைச் சுற்றி அதிக பூச்சிகள் ஊறியபடி சன்னதி காணப்படுகிறது.

இங்கு எந்த ஒரு சிறப்பான வழிபாடும் நடைபெறாமல் இருப்பதற்கு இதுவே சான்றாகும்.

# கல்வெட்டு

கருவறையின் மூன்று பக்கங்களிலும் உள்ள ஜகதி மற்றும் குமுதத்தில் சோழர் காலத்திய கல்வெட்டுகள் காணப்படுகின்றன. தொல்பொருள் ஆய்வுத் துறையினர் இங்குள்ள ஒன்பது கல்வெட்டுகளைப் படி எடுத்து சுருக்கத்தை மட்டும் Annual report of Indian Epigraphy 1931-1932 என்ற புத்தகத்தில் வெளியிட்டிருக்கின்றனர். எந்த ஒரு கல்வெட்டும் சுவரில் வெட்டப்படவில்லை. கல்வெட்டுகள் யாவும் தாங்குதளத்தில் உள்ள ஜகதி மற்றும் குமுதங்களில் வெட்டப்பட்டுள்ளன.

இவ்வொன்பது கல்வெட்டுகளில் முதலாம் இராஜேந்திரனின் 3 கல்வெட்டுகளும், முதலாம் குலோத்துங்கனின் 6 கல்வெட்டுகளும் அடங்கியுள்ளன. இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளில் காலத்தால் முந்தியவை முதலாம் இராசேந்திர மன்னனின் காலத்தனவாக உள்ளதால் இக்கோயிலும் அதே காலத்தைச் சார்ந்ததாகக் கருதலாம். முதலாம் இராசேந்திர சோழர் கி.பி. 1012 முதல் 1044 வரை சோழ நாட்டை ஆண்டதால் இக்கோயில் சுமார் 1000 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாக இருக்கலாம். மேலும் இக்கோயிலில் உள்ள கோஷ்டச் சிற்பம், இவரது தந்தை முதலாம் இராசராசர் படைத்திட்ட தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள ஓவியத்தை ஒத்துக் காணப்படுவதன் மூலம் இக்கோயிலின் பழமையை அறியலாம்.

## முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டுகள்

1. ஆட்சியாண்டு வெட்டப்படாத முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டு ஒன்று மெய்கீர்த்தியை மட்டும் குறிப்பிடுகிறது.
2. இம்மன்னனின் நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இவ்வூரின் பெயரை வீரநாராயணபுரம் என்று குறிப்பிட்டு அங்கு வாழும் நகரத்தார் இக்கோயிலுக்காக இம்மன்னனின் பெயரால் ஒரு நந்தவனம் அமைக்க வரியில்லா நிலங்களைத் தானமாகக் கொடுத்ததைத் தெரிவிக்கின்றது. இக்கல்வெட்டு இவ்வூரை காவிரியின் வடகரையில் இருக்கும் இராஜேந்திரசிம்ம வளநாட்டில் உள்ள மிழிலை நாட்டில் அடங்கிய இஞ்சிக் குடியான வீரநாராயணபுரம் என்று சுட்டுகிறது.
3. மெய்கீர்த்தியுடன் தொடங்கும் 5-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இக்கோயிலின் பெயரை கைலாசநாதர் கோயில் என்றும், இக்கோயில் அமைந்துள்ள ஊரின் பெயர் மற்றும் இருப்பிடம் பற்றி வடகரை இராசேந்திரசிம்ம வளநாட்டின் மிழிலை நாட்டிலுள்ள- இளைச்சிக்குடி வீரநாராயணபுரம் என்று தெரிவிக்கிறது. மேலும் இம்மன்னரிடம் தேவாரநாயகம் என்ற பதவியில் நாங்கூர் நாட்டு மறைக்காடன் இருந்ததாகவும் கூறுகிறது. தேவார நாயகம் என்பது கோயில்களில் தேவாரங்களைப் பாடுபவர்களை மேற்பார்வையிடுவோர்.

இக்கல்வெட்டு முதலாம் இராசேந்திர சோழரின் ஐந்தாம் ஆட்சியாண்டைக் குறிப்பதாகும். இக்கல்வெட்டில் உள்ள



மெய்க்கீர்த்தியில் முதலாம் இராசேந்திரர் வனவாசி, கொள்ளிப்பாகை, மண்டைக்கடகம் முதலிய நாடுகளை வென்றதைக் குறிப்பிடுகிறது.

வடகரை இராசேந்திரசிம்ம வளநாட்டில் மிழிலை நாட்டில் அமைந்துள்ள இலைஞ்சிக்குடியான வீரநாராயணபுரத்து ஸ்ரீகயிலாயமுடையார் கோயிலில் உள்ள ஆறு சிவப்பிராமணர்கள் மேற்கொள்வதாக ஏற்றுக்கொண்ட பணியினைக் குறிப்பிடுகிறது.

### இவர்களின் பெயர்கள்

1. கௌசிகன் சேந்தன் திருவெண்காட்டு அடிகள் பட்டனும்,
2. கௌசிகன் தெச்சிணாமூர்த்தியும்
3. கௌசிகன் சேந்த பிரான் பட்டன்
4. கௌசிகன் சந்திரசேகரன் கூத்தாடி
5. கௌசிகன் சந்திரசேகரன் மறைக்காடடிகள்
6. கௌசிகன் சந்திரசேகரன் சகலசிவன்

இந்த ஆறு சிவபிராமணர்களும் சேர்ந்து ஸ்ரீஇராசேந்திர சோழரின் ‘தேவார நாயகம்’ (அதாவது முதல் மூவர் பாடிய தேவாரப் பதிகங்களைக் கோயில்களில் பாடுபவர்களை மேற்பார்வையிடுபவர்) பணி செய்கின்ற நாங்கூர் நாட்டைச் சேர்ந்த மறைக்காடன் பதஞ்சலி பிடாரர் என்பவரிடமிருந்து அறுபது காசுகளை முதலீடாகப் பெற்றுக்கொண்டு அதிலிருந்து வரும் வட்டியைக் கொண்டு சந்திரன் சூரியன் உள்ள வரை மூன்று நொந்தா விளக்குகள் (பகல் மற்றும் இரவு நேரங்களில் இடைவிடாமல் எரியும் விளக்குகள்) இக்கோயிலில் எரிக்க ஒப்புக்கொண்டுள்ளதை இக்கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. இக்கல்வெட்டின் இறுதியில் இந்த அறுவர் மற்றும் இவ்வூர் கரணத்தாரும் (கிராம நிர்வாக அலுவலர்) கையெழுத்திட்டுள்ளனர்.

திருக்கோயில்களில் தேவாரப் பதிகங்கள் பாடப்படுவதைப் பிற்காலப் பல்லவர் கல்வெட்டுகள் காட்டினாலும் இப்பதிகங்களைப் பாடுபவர்களை மேற்பார்வையிடுகின்ற அதிகாரியாக 'தேவார நாயகம்' என்ற பெயரில் ஒரு அதிகாரி இருந்துள்ளார் என்பது இது போன்ற சோழர்காலக் கல்வெட்டுகளின் வழி வெளிச்சத்திற்கு வருகின்றது. தற்போது கோயில்களில் ஓதுவார் என்கிற பெயரில் தேவாரம், திருப்புகழ் பாடுபவர்கள் இருந்தாலும் இவர்களை மேற்பார்வையிடுபவர்களாக எவரும் இல்லை. ஆனால் 1000 வருடங்களுக்கு முன்னர் இப்பணி நடத்த தனியொரு அதிகாரி இருந்துள்ளார் என்பது சோழர்களின் நிர்வாகத் திறனுக்கோர் எடுத்துக்காட்டாகும்.

அம்மறைக்காடன் பதஞ்சலி பட்டாரன் என்பவரிடமிருந்து காசு பெற்றுக்கொண்டு இக்கோயிலில் இருந்த சிவபிராமணர்கள் இக்கோயிலில் மூன்று நந்தாவிளக்கு எரித்தனர் என்று கூறுகின்றது.

இக்கோயிலின் தெற்கு முகமண்டபத் தாங்குதளத்தில் வெட்டப்பட்டுள்ள இக்கல்வெட்டு முதலாம் இராஜேந்திர சோழனின் நான்காம் ஆட்சியாண்டைக் கொண்டுள்ளது. இக்கல்வெட்டு இவ்வூரை காவிரியின் வடகரையில் இருக்கும் இராசேந்திர சிம்ம வளநாட்டில் உள்ள மிழிலை நாட்டில் அடங்கிய இஞ்சிக்குடியான வீரநாராயணபுரம் என்று சுட்டுகிறது.

இவ்வூரின் பழைய பெயர் இஞ்சிக்குடி. புதிய பெயர் வீரநாராயணபுரம் ஆகும். வீரநாராயணன் என்பது முதலாம் பராந்தகனின் சிறப்புப் பெயர்களுள் ஒன்றாகும். எனவே இவ்வூருக்கு முதலாம் பராந்தகன் காலத்தில் வீரநாராயணபுரம் எனும் பெயர் சூட்டப்பட்டிருக்கலாம்.



இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் மிழிலை நாடு என்பது தற்போது இவ்வூருக்கு (அதாவது மானம்பாடிக்குத்) தென்மேற்கே சுமார் 3 கீ.மீ. தொலைவில் அமைந்துள்ள கோவிலாச்சேரி என்ற கிராமத்தின் உட்கிராமமாக மிழிலை என்ற பெயரில் சுமார் ஐம்பது குடியிருப்புகள் அடங்கிய சிறு கிராமமாக உள்ளது. இது சங்க கால ஊராகும்.

*"ஓம்பா ஈகை மா வேள் எவ்வி*
*புனல் அம் புதனின் மிழலையோடு – கழனிக்*
*கயல் ஆர் நாரை போர் வில் சேர்க்கும்*
*பொன் அணி யாணைத் தொல் முதில் வேளிர்*
*குப்பை நெல்லி முத்தூறு தந்த*
*கொற்ற நீள் குடை கொடித்தேர்ச் செழிய"– புறம். 24*

என்று புறநானூற்றுப் பாடலும்,

*"ஈண்டுநூல் கண்டான் எழின்மிழலைக் கூற்றத்துப்*
*பூண்டபுகழ்ப் பொன்பற்றி காவலனே –மூண்டவரை*
*வெல்லும் படைத்தடக்கை வெற்றிபுனை வீரன்றன்*
*சொல்லின் படியே தொகுத்து"*

என்று புத்தமித்திரனின் வீரசோழிய பாயிர உரையில் காணப்படுகிறது.

இது பழங்காலத்தில் தற்போது வட்டம் என்று அழைக்கப்படும் பகுதி உள்ள பரப்புடைய நாட்டிற்குத் தலைமையிடமாக இருந்துள்ளது. இவ்வூரில்தான் 63 நாயன்மார்களுள் ஒருவரான மிழிலைக் குறும்பநாயனார் அவதரித்ததாகக் கூறப்படுகிறது.

*"பெருமிழலைக் குறும்பர்க்கும் அடியேன்"*

குறுநில மன்னர்களில் சிலர் குறும்பர் என்ற பெயருடையவராய் முற்காலத்தில் இருந்துள்ளனர்.

அம்மரபில் வந்தவர். பெருமிழலை என்பது ஊரின் பெயர். குறும்பர் என்பது மரபின் பெயர் இரண்டும் சேர்ந்து பெருமிழலைக் குறும்பனார் எனப் பெயர் பெற்றிருக்கலாம். திங்களை முடிந்த சிவபெருமானுடைய அடியார்கட்கு உவந்த தொண்டுகளை அவர்கள் கூறுவதற்கு முன்பு குறிப்பறிந்து தாமே எதிர்கொண்டு இனிது புரிந்து உணர்வின் பயனைப் பெறுவாராயினார்.

சிவனடியார்கள் எண்ணிலாதவர்கள் வந்தாலும், உண்ண உண்ணத் தொலையாத திருவமுது ஊட்டுவார். அவர்களுக்குக் காணிக்கையாகச் செம்பொன்னை அள்ளி வழங்குவார். இவ்வாறு சிவநெறியில் ஒழுகும் பெருமிழலைக் குறும்ப நாயனார், எல்லையில்லாத திருத்தொண்டின் உண்மையை உலகறிய திருத்தொண்டரை முறையுடன் வணங்கி திருத்தொண்டத்தொகையைப் பாடியருளிய நம்பியாரூரைப் பணிவதையும் அடியார்களது திருவடிகளை நினைவதையும் நியமமாகக் கொண்டார்.

மிழலைக் குறும்ப நாயனார் இறைவனுடைய திருவருளைப் பெறுவதற்குக் குருவருளே சிறந்தது என்ற எண்ணம் உடையவர். இவர் குருபக்தியால் திருவருளையும் அட்டமாசித்திகளையும் பெற்றவர்.

முதலாம் இராசராசர் நாட்டினை அளந்து ஆறுகளை எல்லைகளாகக் கொண்டு வளநாடு என்ற பெயரில் பகுதிகளாகப் பிரித்தார். வளநாடு என்பது தற்போது மாவட்டத்திற்குச் சமமான நிலப்பரப்பு உடையதாகக் கருதலாம். காவிரியின் வடகரையில் உள்ள பகுதி முதலாம் இராசேந்திரர் காலத்தில் இராசேந்திரசிம்ம வளநாடு என்றழைக்கப்பட்டது.

நாகநாதசுவாமி கோயில் என்றழைக்கப்படும் இக்கோயில் இராசேந்திர சோழர் காலத்தில் கைலாயநாதர் 



கோயில் என்று குறிப்பிடப்பட்டது. இக்கல்வெட்டு இவ்வூரில் உள்ள நகரத்தார்கள் (வணிகத்தில் ஈடுபட்ட வணிகர்கள்) இக்கோயில் நிர்வாகத்தில் பங்காற்றியுள்ளதைக் கூறுகிறது.

இந்நகரத்தார் இக்கோயில் இறைவனுக்கு மூன்று சந்தி வேளைக்கும் பூக்கள் பறித்து சார்த்தி அருள ஏற்கனவே உள்ள நந்தவனத்திற்குக் கூடுதலாக நிலம் கொடுத்து அதை மன்னர் பெயரால் இராசேந்திர சோழன் நந்தவனம் என அழைத்துக் கோயிலுக்குக் கொடையாக்கியுள்ளனர். மேலும் இந்நிலத்திற்குச் செலுத்த வேண்டிய வரி, எச்சோறு (அதாவது அரசாங்க அதிகாரிகள் அலுவல் நிமித்தமாய் ஊருக்கு வரும்போது அவர்களை உபசரிக்கும் பணிக்காக வசூல் செய்யப்படும் வரி) போன்ற வரிகளை நகரத்தாரால் கட்டப்பட்டு இறையிலி (அரசாங்க வழக்கமாக வசூல் செய்யப்படும் வரி எதுவும் வசூல் செய்யப்படாத இடமாக) நிலமாகக் கோயிலுக்கு வழங்கியுள்ளனர்.

மேலும் இந்நிலத்தின் எல்லைகளாகக் கிழக்கில் திருக்குளமும், தெற்கே பிடாரி கோயிலும், ஏற்கனவே உள்ள நந்தவனமும், மேற்கிலும் வடக்கிலும் திருக்குளமும் உள்ளதாகச் சுட்டுகின்றது.

இன்று இக்கோயிலின் நேர்க்கிழக்கே சுமார் 600 மீ. தொலைவில் நந்தவனம் என்றழைக்கப்படும் பகுதி உள்ளது. சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் வரை இப்பகுதியிலிருந்து பூக்கள் பறித்து இறைவனுக்கு அணிவிப்பார்கள் என்று இப்பகுதியில் வசிக்கும் வயது முதிர்ந்த பெரியவர்கள் கூறுகிறார்கள்.

இன்றைய தேதியில் இந்த நந்தவனத்தில் குடிசை வீடுகள் சில ஆக்கிரமித்துள்ளன. இந்த நந்தவனத்தின் வடக்கில் ஒரு குளமும், கிழக்கில் முனியனார் கோயிலும் உள்ளன. பிடாரி கோயில் தற்போது இல்லை.

## முதலாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டு

1. விமானத்தின் வடக்கு தாங்குதளத்தில் உள்ள முதலாம் குலோத்துங்கனின் எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு வருடந்தோறும் சித்திரை மாதத்தில் இக்கோயிலில் நடைபெற்ற திருவிழாவின் செலவினங்களுக்காக இவ்வூர் நகரத்தார் சில நிலங்களை இக்கோயிலுக்குத் தானமாகக் கொடுத்ததைத் தெரிவிக்கின்றது.

2. விமானத்தின் வடக்கு தாங்குதளத்தில் உள்ள இம்மன்னனின் 18-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கல்வெட்டாகும். இக்கல்வெட்டு இக்கோயில் சித்திரை விழாவில் ஐந்து தடவை தமிழ்க்கூத்து நடத்தும் விருதராஜ பயங்கர ஆச்சாரியான் என்ற விக்கிரமாதித்தன் திருமுதுகுன்றன் என்பவனுக்கு இக்கோயில் நிர்வாகத்தினரும் இவ்வூர் நகரத்தாரும் நாகன்மாடி என்ற ஊரிலுள்ள சில நிலங்களைக் கூத்துக்காணியாக அளித்ததைத் தெரிவிக்கின்றது. இக்கல்வெட்டு முதலாம் குலோத்துங்க சோழரின் 18-ஆம் ஆட்சியாண்டைக் குறிப்பதாகும். முதலாம் இராசேந்திர சோழரின் காலத்தில் இராசேந்திரசிம்ம வளநாடாகத் திகழ்ந்த இப்பகுதி இப்போது விருதராச பயங்கர வளநாடு என்று பெயர் மாற்றம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கையிலாயமுடையார் கோயிலில் சித்திரை மாதத்தில் நடைபெற்ற திருவிழா உற்சவத்தில் இக்கோயில் இறைவன் திருவோலக்கத்தில் (கோயில் மண்டபத்தில்) எழுந்தருளியிருக்கும்போது விக்கிரமாதித்தன் திருமுதுகுன்றனான விருதராச பயங்கர ஆச்சாரியான் என்பவர் 'தமிழ்க்கூத்து' நடத்தினார். இக்கூத்து இவ்விழாவில் ஐந்து முறை நிகழ்த்தப் பெற்றது. இக்கூத்து நிகழ்த்தியவருக்கும், அவரது சந்ததியினருக்கும் கூத்தாட்டுக்



காணியாக நிலம் ஒன்றினை இவ்வூர் நகரத்தாராலும், இக்கோயில் தேவகன்மிகளாலும் வழங்கப்பட்டது. (தேவகன்மிகள் என்பவர்கள் கோயிலை இன்றைய தேதியில் நிர்வகிக்கும் அறங்காவலர் போன்றவர்கள். இவர்கள் வருடந்தோறும் மாறிகொண்டேயிருப்பார்).

3. கூத்தாட்டுக் காணி என்பது கோயிலில் கூத்து நடத்துபவருக்குக் கூலியாக வாழ்வாதாரமாக வழங்கப்பட்ட நிலமாகும். இதனை அவர் ஆயுள் முழுவதும் அனுபவித்துக் கொள்ளலாம். கோயிலில் குறிப்பிட்ட திருவிழாக் காலங்களில் கூத்து நடத்த வேண்டிய கடமை இவருக்குண்டு. இவரது சந்ததியரும் இதேபோல் கூத்துக்கட்டி நிலத்தை அனுபவித்துக் கொள்ளலாம்.

கூத்தாட்டுக் காணியாக வழங்கப்பட்ட நிலம் இக்கோயிலின் தேவதானமான நாகன்பாடி என்ற கிராமத்தில் வடகிழக்குத் திசையில் உள்ளதென்றும், இக்கிராமம் மிழிலை நாட்டில் உள்ளதென்றும் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. தேவதானம் என்பது ஒரு கிராமத்தின் குடியிருப்புகள், கோயில்கள், குளங்கள் போன்றவை தவிர மீதமிருக்கும் விளைநிலங்கள் முழுவதும் கோயிலுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலம் ஆகும். கல்வெட்டில் குறிக்கப்படும் இந்த நாகன்பாடி இந்நாளில் நல்லம்பாடி என்ற பெயரில் ஒரு சில குடியிருப்புகளும் நிலங்களும் கொண்டு இவ்வூரின் உட்கிராமமாக உள்ளது.

கூத்தாட்டுக் காணியாக வழங்கப்பட்ட நிலத்தின் எல்லைகளைத் தெரிவிக்கும்போது கிழக்கில் சேஞ்சலூர் எல்லை வாய்க்காலும், தெற்கில் வீரநாராயணபுரம் (அதாவது இவ்வூர்) எல்லையும், மேற்கில் சண்டேசுவர மசக்கலும் (காடும் மேடுமாக இருந்த நிலத்தை வெட்டி சீர்செய்து நன்செய் நிலமாக ஒதுக்கப்பட்ட நிலம்) வடக்கில் குஞ்சிரமல்லையன் வாய்க்காலும் குறிப்பிடப்படுகின்றன.

## இறை வழிபாட்டில் இசையும் ஆடலும்

இயல், இசை, நாடகம் என்று முத்தமிழாக வளர்ந்த தமிழ்மொழியில் இசையும், ஆடலும் இன்றியமையாத அங்கங்களாக உள்ளன. ஆடலும், இசையும் அக்கால வழிபாட்டில் முக்கிய இடத்தை வகித்தன.

ஆலயத்தில் வழிபாடு செய்யும் வழிமுறைகள் 16 அங்கங்களைக் கொண்டது. இதனை 'சோடசோபசாரம்' என்று ஆகமங்கள் குறிப்பிடுகின்றன. இப்பதினாறு அங்கங்களுள் வாத்தியக் கருவிகளின் இசை 15-ஆவது அங்கமாகவும், ஆடல் 16-ஆவது அங்கமாகவும் உள்ளன. இசை கலந்த ஆடல் இல்லாமல் அக்காலத்தில் வழிபாடு முடிவடைவதில்லை. ஆகவே இசையும், ஆடலும் கோயில்களுடன் இரண்டறக் கலந்தே வளர்ந்து வந்தன. இசையும், ஆடலும் கலந்த கூத்துக்கள் கோயில் திருவிழா காலங்களில் நடத்தப்பட்டு வந்தன.

தமிழ் நூல்களின் வழியே இக்கூத்துக்கள் பொதுவாக சாந்திக்கூத்து, விநோதக்கூத்து என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டிருப்பதை அறியலாம். சாந்திக்கூத்து சொக்கம், மெய், அவிநயம், நாடகம் என நால்வகையாகவும் விநோதக்கூத்து குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை என ஆறு வகையாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வகைக் கூத்துக்களைத் தவிர சோழர் காலத்தில் சாக்கைக் கூத்து, ஆரியக்கூத்து, தமிழ்க்கூத்து போன்ற கூத்துக்கள் கோயில் விழாக்களில் நடத்தப்பட்டன எனக் கல்வெட்டுகள் கூறுகின்றன. சாக்கைக்கூத்து திருவீழிமிழிலை, கோட்டூர், காமரசவல்லி, கீரனூர், கீழ்ப்பழுவூர் ஆகிய ஊர்களிலுள்ள கோயில்களில் திருவிழாக்



காலங்களில் நடத்தப்பட்டதாக அங்குள்ள கல்வெட்டுகள் கூறுகின்றன. அதேபோல் ஆரியக்கூத்து திருநள்ளாறு, திருவாவடுதுறை, வயலகம், திருவிடைமருதூர் ஆகிய ஊர்களிலுள்ள கோயில்களில் திருவிழாக் காலங்களில் நடைபெற்றது.

மானம்பாடியில் உள்ள கல்வெட்டு இவ்வூர்க் கோயிலில் சித்திரை மாதத் திருவிழாவில் தமிழ்க்கூத்து நடைபெற்றதைத் தெரிவிக்கிறது. மற்ற கூத்துக்களைப் பற்றித் தெரிவிக்கும் கல்வெட்டுகள் பல கோயில்களில் காணப்பட்டாலும் தமிழ்க்கூத்து பற்றித் தெரிவிக்கும் ஒரே கல்வெட்டு இக்கோயிலில்தான் உள்ளது. இக்கல்வெட்டு வழிதான் இப்படியொரு கூத்து தமிழ்நாட்டுக் கோயில்களில் நடத்தப்பட்டமை தெரியவருகிறது. இதேபோல் வேறு ஊர்களிலும் தமிழ்க்கூத்து நடத்தப்பட்டிருக்கலாம் என ஊகிக்க முடிகிறது.

இந்த ஒரு அரிய தகவலை இக்கோயில் கொண்டுள்ளதால் தமிழக வரலாற்றில் இக்கோயில் தனித்த இடத்தைப் பிடித்துள்ளது. இக்கோயில் அப்புறப்படுத்தப் பட்டிருப்பின் இக்கல்வெட்டு மறைந்து போக வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். தமிழின் பெயரில் ஒரு கூத்து நடத்தப்பட்டுள்ளது என்கிற அரிய வரலாற்றுத் தகவலும் அத்தோடு மறைந்து போயிருக்கும். நல்லவேளை அப்படி எதுவும் நேராமல் நாகரீக வளர்ச்சியின் தாக்குதலிலிருந்து சிறு உரசலுடன் தப்பிப்பிழைத்த இக்கோயிலும் கல்வெட்டும் இளைய தலைமுறையினருக்கும், வருங்காலத் தலைமுறைகளுக்கும் தமிழ்க்கூத்து நடத்தப்பட்ட நிகழ்வை நினைவூட்டிக் கொண்டேயிருக்கும்.

4. இக்கோயிலின் தென்புறத் தாங்குதளத்தில் வெட்டப்பட்டுள்ள முதலாம் குலோத்துங்க சோழரின் 23-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் சோழர்களின் தலைநகரமான கங்கை கொண்ட சோழபுரத்து வியாபாரி கருப்பூர் உடையான் பிருதுவலி சுற்றி என்பனிடம் இக்கோயில் சிவப்பிராமணர்கள் (கல்வெட்டு சிதைந்துள்ளதால் பெயர்கள் சரிவரக் கிடைக்கவில்லை) சிலர் 500 கலம் நெல்லை முதலீடாகப் பெற்றுக்கொண்டு ஒரு கல நெல்லுக்கு ¾ குருணி நெல் என்ற வட்டி விகிதத்தில் வட்டிக் கணக்கிடப்பட்டு 500 கலம் நெல்லுக்கு வரும் வட்டியைக் கொண்டு இக்கோயிலுக்கு அபூர்விகளாய் (தலயாத்திரை செய்யும் வேத விற்பன்னர்கள்) வரும் மாகேஸ்வரர்களுக்கு தினமும் 5 சட்டி சோறும், 2 சட்டி கறியமுதும் கொடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கிறது.

சட்டி ஒன்றுக்கு 5 நாழி அரிசி வீதம் 5 சட்டிக்கு 10 நாழி அரிசி எனக் கணக்கு செய்யப்பட்டு இந்த தர்மத்திற்கு அரிசி ஒதுக்கப்பட்டுள்ளது. 1 நாழி என்பது சுமார் அரை லிட்டர் ஆகும்.

500 கலம் நெல் முதலீட்டிற்கு 1 கலம் நெல்லுக்கு ¾ குருணி வீதம் வட்டிக் கணக்கு செய்யப்பட்டு குருணி (31¼ கலம்) நெல் வட்டியாகப் பெறப்பட்டுள்ளது. 1 குருணி என்பது சுமார் 4 லிட்டர். இக்கல்வெட்டுப்படி 5 கலம் நெல்லைக் குற்றி அரிசி பெறப்பட்டது தெரிகிறது. இதனை அஞ்சிரண்டு வண்ணம் என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது. இதன்படி கணக்கிட்டால் 375 குருணி நெல்லிலிருந்து 150 குறுணி அரிசி பெறப்பட்டது தெரிகிறது (சுமார் 600 லிட்டர்).



இக்கல்வெட்டின் முடிவில் இக்கோயில் கணக்கன் கையெழுத்திட அவனைத் தொடர்ந்து 12 நபர்கள் கையெழுத்திட்டுள்ளனர். இதில் இக்கோயில் சிவப்பிராமணர்களும் அடக்கம். இக்கல்வெட்டுத் தெரிவிக்கும் செய்தியிலிருந்து வேதவிற்பன்னர்கள் ஊர்கள்தோறும் சென்று கோயில்களில் வேதப்பிரசாரம் செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

5. இக்கோயிலின் வடபுறத் தாங்குதளத்தில் வெட்டப்பட்டுள்ள முதலாம் குலோத்துங்க சோழனின் 36-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இவ்வூர் வியாபாரி உறையூர் உடையான் நம்பன் சூரியத்தேவன் என்பவன் இறைவன் திருஅமுதுக்கு 3 மா நிலத்தினை விலைக்கு வாங்கி கோயிலுக்கு அளித்ததைத் தெரிவிக்கிறது. இக்கல்வெட்டில் ஒரு மா 128 குழிகள் கொண்டது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு மாவிற்கு எத்தனை குழி என்பது இடத்தைப் பொறுத்து மாறுபட்டிருந்தது. தற்போதுள்ள நடைமுறையில் ஒரு மா என்பது 100 குழி ஆகும். 1 குழி என்பது 144 சதுர அடியாகும்.

இந்த 3 மா நிலத்திலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு இறைவனுக்கு அமுது படைக்கப்பட்டது. இக்கல்வெட்டின் இறுதியில் இப்பிரமாணப் பத்திரம் எழுதியவன் திருவிசலூர் கரணத்தான் என்று குறிக்கப்பட்டுள்ளது. இதற்கு அடுத்து தானம் அளித்த உறையூர் உடையான் நம்பன் சூரியதேவனின் கையெழுத்து உள்ளது. இக்கையெழுத்தை அடுத்து இக்கல்வெட்டின் தொடர்ச்சியாக மேலும் சில செய்திகள் வெட்டப்பட்டுள்ளன.

இவ்வூர் நகரத்தார் (வணிகர்கள் அடங்கிய குழு) கயிலாயமுடையார் கோயிலில் சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரம் தொடங்கியபின் 7 நாட்களில் நடத்தப்பட்ட விழாவில் திருக்கயிலாயமுடையாருக்கு அமுது படைக்க நிலம் ஒன்றினை இறையிலி (அரசாங்கத்திற்குக் கொடுக்கப்படவேண்டிய வரிகளிலிருந்து விலக்குப்பெற்ற நிலம்) செய்து கொடுத்தனர். இந்நிலம் உறையூர் உடையான் நம்பன் சூரியதேவனால் விலைக்கு வாங்கப்பட்டு கோயிலுக்கு வழங்கப்பட்ட 3 மா நிலம் ஆகும்.

இந்நிலத்தின் எல்லைகளாகக் கிழக்கில் சேஞ்சலூர் கிராம எல்லையும், தெற்கில் மேல்பபடியூர் கிராம எல்லையும் அமைந்திருந்தன. கல்வெட்டுச் சிதைவுற்றுள்ளதால் மேற்கு வடக்கு எல்லைகளை அறியமுடியவில்லை. சேஞ்சலூர் என்பது மானம்பாடிக்குக் கிழக்கே சுமார் 1 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள சேஞ்சலூர் கிராமம் ஆகும். இது சண்டேசுவர தேவரின் அவதாரத்தலம். இக்கோயிலின் தேவதானமான நாகன்பாடி என்ற கிராமம் ஒரு எல்லையாகவும், இக்கோயிலுக்குத் திருவிளக்குப்புறமாக இறையிலி நிலத்திற்குத் தெற்கில் நம்பன் சூரியதேவன் கொடையளித்த நிலம் உள்ளதாகக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. திருவிளக்குப்புறம் என்பது கோயிலில் விளக்கேற்றும் பணியிலிருப்போரின் வாழ்வாதாரமாக வழங்கப்படும் நிலமாகும். இத்திருவிளக்குப்புறம் இறையிலி செய்து வைக்கப்பட்ட நிலமாக இருந்தது என்று அறிகிறோம்.

இவன் இந்நிலத்தை இறையிலி செய்வதற்கு இக்கோயில் பண்டாரத்தில் 5¼ கழஞ்சு பொன் முதலீடாக வைத்தான். இம்முதலிலிருந்து ஆண்டுதோறும் கிடைக்கும்



வட்டியைக் கொண்டு அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய பெருவரி, சிறுவரி உள்ளிட்ட அனைத்து வரிகளும் அவ்வப்போது நகரத்தாரால் அரசாங்கத்திற்குச் செலுத்தப் பட்டன. இந்நிலம் இறையிலியாக ஆக்கியமைக்கான விபரங்கள் கல்லிலும் செப்பேடுகளிலும் எழுதி ஆவணமாக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன. இப்பிரமாணப் பத்திரம் எழுதியவன் இவ்வூர் கரணத்தான் மத்தியஸ்தன் செற்றூர் உடையான் திருவிசலூர் நகசாத்தன் என்பவன் ஆவான். இவன் எழுத்திற்குக் கீழே 22 நகரத்தார்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

**இவர்களின் பெயர்கள்**

1. செம்பங்குடையான் காராயில் கயிலாயத்தான்
2. நெய்வேலி உடையான் வெண்காடன் சோழன்
3. உறையூர் உடையான் நம்பன் அமகுணவன்
4. வாரமங்கலமுடையான் ஆடவல்லான் திருவிசநல்லூர் உடையான்
5. தேவங்குடையான் முழையூரடிகள் வெண்காடன்
6. தண்டந்தோட்டமுடையான் மண் கோயிலப்பன்
7. பாருமங்கலமுடையான் ஆடவல்லான் வெண்காடு தேவன்
8. கருப்பூர் உடையான் திருச்சிற்றம்பலமுடையான் திருநாரணன்
9. தஞ்சாவூர் கிழவன் வெண்காடன் தில்லை விடங்கன்
10. உரையூர் உடையான் நம்பன் உடையான்
11. அரைசூர் உடையான் ஆயப்பன் ஆதித்தன்

12. வெள்ளைக் குளமுடையான் நக்கன்
13. நரிக்குடையான் திருமுதுகுன்றன் திருவடவநாதன்
14. செமணங்குடையான் இராமந்தகன்
15. திருபாலைக்குடையான் அம்பலக்கூத்தன் திருச்சிற்றம்பலமுடையான்
16. அரங்கன் பஞ்சத்தி (சிதைந்துள்ளது)
17. நல்லூருடையான் நஞ்சுண்டனான முத்தி
18. உரையூர் உடையான் அம்பலமுடையான்
19. முண்டி உடையான் கயிலாயனான ஆடவல்லான்
20. வாரமங்கலமுடையான் கண்ட பிச்சன்
21. வாரமங்கலமுடையான் கண்டன் திருவையாறுடையான்
22. தூதுவன் திருவையாறுடையான்

இந்த 22 வணிகர்களும் பல்வேறு ஊர்களைச் சொந்த ஊர்களாகக் கொண்டவர்கள் என்பதும் இவர்கள் இங்கு ஒரு குழுவாகக் கூடியிருந்து வணிகர்களாக வாழ்ந்து வந்தனர் என்பதும் தெரிகிறது.

இந்த நகரத்தார்களில் ஒருவன் தூதுவன் திருவையாறு உடையான் ஆவான். பொதுவாக நிலதானம் பற்றிய கல்வெட்டுகளில் தூதுவன் பெயர் குறிப்பிடப்படுவதில்லை. ஆனால் இங்கு தூதுவன் ஒருவன் கையெழுத்திட்டிருப்பது சிறப்பானது. இவன் யாருக்காக அல்லது எதற்காக தூது சென்றான் என்கிற விபரம் கல்வெட்டில் இல்லை. அல்லது இந்த ஊரைச் சார்ந்து வாழும் தூது செல்லும் பணியில் இருந்தவனா என்பதையும் அறியமுடியவில்லை. ஆனால் நகரத்தார் வாழும் ஊர்களில் தூதுவன் அமர்த்தப்பட்டிருந்தான் என்று கருதலாம்.



இக்கோயில் கல்வெட்டிலிருந்து ஒருவர் நிலத்தை விலைக்கு வாங்கி அதைக் கோயிலுக்குத் தானமாகக் கொடுத்தது மட்டுமல்லாமல் அந்நிலம் வைத்துள்ளோர் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளைச் செலுத்த இடம் கொடுக்காமல் கோயில் பண்டாரத்தில் ஒரு நிதியை முதலீடாக வைத்து அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு அரசாங்க வரிகளைச் செலுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள விதம் கோயிலுக்கு நிலதானம் அளித்த உறையூர் உடையாரின் பெரிய மனதையும் தீர்க்கதரிசனத்தையும் எடுத்துக்காட்டுகிறது. தாம் தானமாக அளிக்கும் நிலத்திற்கு வரி கட்டுவதற்காக வேண்டி எங்கே கோயிலின் வருவாயில் சிறு இழப்பு ஏற்பட்டு விடுமோ என்று அந்தக்கால மக்கள் நினைத்தனர் போலும்! என்னே அவர்களின் பேருள்ளம்.

6. இக்கோயிலின் கருவறை தென்புறத்தில் காணப்படும் இக்கல்வெட்டு சிதைந்துள்ளதால் மன்னர் பெயரை அறியமுடியவில்லை. ஆனால் கல்வெட்டு மன்னரின் 36-ஆம் ஆட்சியாண்டினைக் குறிப்பிடுவதாலும் கல்வெட்டில் குறிக்கப்படும் பெயர்களைக் கொண்டும் இக்கல்வெட்டு முதலாம் குலோத்துங்க சோழர் கல்வெட்டு என்று துணியலாம். இக்கல்வெட்டில் நகர் நியோகம் என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது. இந்நகர் நியோகம் கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்ளப்பட்டது. இந்நியோகத்தினை எழுதியவர் இவ்வூர் கரணத்தான் செற்றூர் உடையான் திருவிசலூர் நகரத்தான் ஆவார். இக்கல்வெட்டின் இறுதியில் கரணத்தான் கையெழுத்திட்டபின் 10 நகரத்தார்கள் கையெழுத்திட்டுள்ளனர். கையெழுத்திட்ட பலரின் பெயர்கள் மேற்கண்ட கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

தற்போது நம்பி நங்கை என்ற பெயரில் குளம் எதுவுமில்லை. ஊரில் இருக்கும் குளங்களுள் பெரிய குளமாக கோயிலுக்கு வடக்கில் ஒரு குளம் உள்ளது. இதனைக் கோயில் குளம் என்று அழைக்கின்றனர். இதற்கருகில் மற்றொரு குளம் இருந்தாலும் நாளடைவில் தூர்ந்துவிட்டதாகத் தெரிகிறது.

மேலும் கல்வெட்டின் இறுதியில் இராஜதுரோகமும் சிவதுரோகமும் செய்தவர்களுக்கு வழங்கப்படும் ரெவுண்டம் என்ற இராஜதண்டனை இத்தர்மத்திற்கு விரோதம் செய்பவர்களுக்கு வழங்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது. இதிலிருந்து இந்த தர்மம் முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தெரிகிறது.

7. முதலாம் குலோத்துங்கனின் 38-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு இக்கோயிலில் காணப்படுகிறது. இது நகரத்தார் கூடியிருந்து முடிவெடுத்துச் செயல்படுத்திய தானம் பற்றிப் பேசுகிறது. ஒரு ஊரின் திருவீதியில் கூடியிருந்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். இவ்வூர் கயிலாயமுடையார் கோயிலில் சித்திரை மாதத்தில், சித்திரை நாளில் நடைபெறும் திருவிழாவிற்குப் பின் ஏழு நாட்களும் முன் ஏழு நாட்களும் நடைபெறவுள்ள சிறப்பு பூஜைகளுக்கும் திருவிழாவில் இறைவன் வீதி உலா பவனி வரும்போது, திருவீதியில் பணி செய்யும் சிவனடியார்களுக்கும், இறைவனுக்கும் அமுது செய்ய வாய்ப்பாக இவ்வூரின் ஆறு வியாபாரிகள் நிலம் ஒன்றினைத் தானமாக அளித்துள்ளனர்.

**தானமளித்த வியாபாரிகள் பெயர்கள்**

1. அணுக்க நம்பி
2. வாடிமங்கலமுடையான் வெண்காடு தேவர் திருச்சிற்றம்பலமுடையான்



3. வெண்காடு தேவன் பொன்னம்பலக் கூத்தன்
4. நம்மன் பும்மாண்டான்
5. வெண்காடு சோழன்
6. காறாயில் கயிலாயம்

இவர்கள் வழங்கிய நிலம் 128 குழி கொண்ட ஒரு மா என்று கணக்கிடப்பட்டு வழங்கப்பட்டது. கல்வெட்டு சற்று சிதைந்துள்ளமையால் எவ்வளவு நிலம் தானமாக வழங்கப்பட்டது என்கிற விபரம் கிடைக்கவில்லை. இந்நில தானத்தைப் பற்றிய விபரம் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் வெட்டி வைத்துக்கொள்ள இக்கோயில் மகேஸ்வரர்கள் பணிக்கப்பட்டனர்.

இக்கல்வெட்டில் இந்நிலத்தின் எல்லைகளைக் குறிப்பிடும்போது இவ்வூரில் பத்தகன் பத்தன் என்ற பெயரில் ஒரு மடம் இருந்துள்ளமை தெரியவருகிறது. இம்மடத்திற்கும் இவ்வூர் நகரத்தார்கள் இறையிலி செய்து நிலதானம் கொடுத்துள்ளனர்.

8. முதலாம் குலோத்துங்கனின் அடுத்த கல்வெட்டு ஆட்சியாண்டு அறியமுடியாத வகையில் உள்ளது. இக்கல்வெட்டு இக்கோயிலில் நடைபெற்ற சித்திரைத் திருவிழா செலவினங்களுக்காக நெல் ஒதுக்கீடு செய்யப்பட்ட பட்டியலைத் தருகின்றது. அக்காலத்தில் உழைப்புக்கு ஊதியமாக நெல்தான் கொடுத்துள்ளனர்.

சித்திரைத் திருவிழாவில் பின் ஏழு நாட்களும் நடைபெறும் விழாவில் மூலவருக்கு நடைபெறும் பூசைக்கும் இறைவன் வீதியுலா வலம் வந்து கோயில் மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும்போது திருஅமுது உள்ளிட்டவற்றுக்கும்

வேண்டும் நிவந்தங்களுக்கு முதலீடாக இக்கோயில் பண்டாரத்தில் நம்பன் சூரியதேவன் என்கிற இவ்வூர் வியாபாரி 10 கழஞ்சு பொன் வைத்தான். இப்பொன் கொண்டு 444 கலம் நெல் முதலாக வைக்கப்பட்டு ஒரு கலம் நெல்லுக்கு நாளொன்றுக்கு ¾ குறுணி (1 கலம் = 12குறுணி) நெல் வட்டி எனக் கணக்கிட்டு 444 கலம் நெல்லுக்கு 111 கலம் நெல் வட்டியாக வருவதைக் கொண்டும், நிவந்தங்கள் செய்வதற்காக ஏற்கனவே இந்த வியாபாரியால் இறையிலி செய்து கல்லில் வெட்டி வைக்கப்பட்ட நிலத்திலிருந்து கிடைக்கும் 60 கலம் நெல்லும் சேர்த்து மொத்தம் 171 கலம் (111+60) நெல்லும் சித்திரைத் திருவிழாவின் பின் ஏழு நாட்களுக்கான செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டன. 171 கலம் நெல்லின் தானமாக வழங்கப்பட்ட நிலத்திலிருந்து கிடைக்கும் 60 கலம் நெல் நீக்கி மீதமிருக்கும் 111 கலம் நெல்லை இக்கோயில் காணியுடைய சிவபிராமணரும் பத்தகன் பத்தன் மடத்தின் நிர்வாகியுமான மாறன்பாடி பிச்சனும் கோயில் பண்டாரத்தில் செலுத்திவிடுவதாக நம்பன் சூரியதேவனுக்குப் பிரமாணப் பத்திரம் எழுதிக் கொடுத்தனர். இப்பிராமணப் பத்திரம் கல்லிலும் செப்பேடுகளிலும் ஆவணமாக வெட்டி வைத்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டது. இப்பிரமாணப் பத்திரம் எழுதியவன் இக்கோயில் காணியுடைய கணக்கன் செற்றூருடையான் மத்தியஸ்தன் திருவிசலூர் நகரத்தான் ஆவான். இதன் கீழ் காணியுடைய சிவபிராமணர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

இக்கல்வெட்டிலிருந்து ஒரு திருவிழாவில் ஏற்படக்கூடிய செலவிற்குத் தானமாகப் பெற்ற பொன்னை நெல்லாக மாற்றி அதனை முதலீடாக வைத்து அதிலிருந்து கிடைக்கும்



வட்டி (நெல்) கொண்டு திருவிழாவின் ஒரு பகுதி செலவுகளைச் சரியாகக் கணக்கிட்டு செயல்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சரிவர நடத்தப்பட்டு அதற்குரிய ஆவணம் செப்பேடாகவும், கல்வெட்டாகவும் ஆக்கப்பட்டுள்ளது.

தானம் கொடுத்தவரின் பொருள் எவ்வாறு முதலீடாக வைக்கப்பட்டு வட்டி மூலம் வசூல் செய்து ஆண்டுதோறும் திருவிழா செலவிற்காக இவ்வாறு செலவிடப்படும் என்று பலர் அறியுமாறு கல்வெட்டாக வெட்டி கோயிலில் வைத்திருப்பது அக்கோயில் நிர்வாகத்தின் நீதியையும், நேர்மையான நிர்வாகத்தையும் காட்டுகின்றது.

# முடிவுரை

மக்கள் போக்குவரத்தின்றி, பூசையின்றி பழுதுபட்டு இடிந்த நிலையில், சில கல்வெட்டுகள் மட்டுமே உள்ள மானம்பாடி திருக்கைலாயநாதர் என்னும் நாகநாதசுவாமி கோயில் எத்தனை செய்திகளைத் தந்துள்ளது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்த மானம்பாடி கிராமத்தையும், அதில் வசித்த மக்களையும், இக்கோயிலையும், அதன் வழிபாடுகளையும், திருவிழாவையும் இக்கோயில் கல்வெட்டுகள் படம் பிடித்துக் காட்டுகின்றன. இவ்வளவு தகவல்களைத் தாங்கியுள்ள மானம்பாடி நாகநாதசுவாமி கோயில் என அழைக்கப்படும் திருக்கயிலாயநாதர் கோயில் தமிழ்நாடு அரசால் பாதுகாக்கப்பட்ட தொல்லியல் சின்னமாக அறிவிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

# துணைநூற்பட்டியல்


| | |
|---|---|
| 1. ஓவியர் கோ. திருஞானம் | மரபுக் கட்டடக்கலை (மு.தொ) மாணவர் புத்தகப் பண்ணை அடையாறு, சென்னை-20 |
| 2. நடன. காசிநாதன் | தமிழர் நாகரிகம் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சென்னை- 600 113 |
| 3. முனைவர் குடவாயில் பாலசுப்பிரமணியன் | சோழமண்டலத்து வரலாற்று நாயகர்களின் சிற்பங்களும் ஓவியங்களும் தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர் |
| 4. நடன. காசிநாதன் | கல்வெட்டு ஓர் அறிமுகம் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சென்னை-8 |
| 5. தி.வை. சதாசிவபண்டாரத்தார் | பிற்காலச் சோழர் வரலாறு அண்ணாமலைப்பல்கலைக்கழகம் |
| 6. S.R. Balasubramaniyam | Later Chola Temple |

# நிழற்படங்கள்



கோயில் நுழைவாயில்



மூலவர் விமானம்





விமான உட்தோற்றம்



கருவறை அர்த்த மண்டபம்



மூலவர் சன்னதியின் கிழக்குப்பகுதி



அம்மன் கோயில் விமானம்





மூலவர் சன்னதியின் தென் பகுதி



மூலவர் சன்னதியின் வடக்குப் பகுதி



மூலவர் சன்னதியின் மேற்குப்பகுதி



அதிட்டானப் பகுதி





பரிவார ஆலயம்



கோயில் குளம்



மூலவர்



மூலவர் நந்தி





விநாயகர்



வள்ளி முருகன் தெய்வானை



லிங்கோத்பவர்



பிச்சாடணமூர்த்தி





சூரியன்



கொற்றவை



சிவன் பார்வதி





நடராசர்




தட்சிணாமூர்த்தி





பைரவர்



பௌத்த சிற்பம்



புடைப்புச் சிற்பம்



தோரணச் சிற்பங்கள்



**தோரணச் சிற்பங்கள்**





## கோட்டப் பஞ்சரம்







## கோட்டப் பஞ்சரம்



## கல்வெட்டுகள்







## கல்வெட்டுகள்






## கல்வெட்டுகள்







## கல்வெட்டு



## கல்வெட்டு





## கல்வெட்டு

